பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை 12.09.2023 கதிர் 305

## இது ரகசியம் அல்ல!

சனல் 4 தொலைக்காட்சி, உயிர்த்த ஞாயிறு தொடர்பான தனது காணொளி மூலம் தெற்கு அரசியலில் கிளப்பிவிட்டுள்ள பெரும் புயலில் இருந்து எப்படித் தப்பிப்பது என்பதுதான் இப்போது பிரதான கட்சிகளின் தீவிர மந்திராலோசனை என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

தேர்தல் நெருங்கிவரும் காலத்தில் இந்தக் காணொலி வெளியாகி இருப்பதால் வழக்கம் போல அதனைக் கடந்து சென்றுவிட முடியாமல் கட்சிகள் அல்லாடுகின்றன. அதிலும் குறிப்பாக ஆளும் தரப்புக் கட்சிகளின் நிலைப்பாடே பெரும் திண்டாட்டமாக இருக்கின்றது.

இந்தக் காணொலியின் அடிப்படையில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐக்கி மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்கனவே அறிவித்து தனக் குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக்கொண்டுள்ளார். இறுதிப் போர் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துமாறு தமிழ் மக்கள் கடந்த 13 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தி வந்தபோதும் அது குறித்து வாய் திறக்காத சஜித், இந்த விடயத்தில் மட்டும் அவசர அவசரமாக சர்வதேச விசாரணையைக் கேட்பது அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே.

எனவே நிலமை எதிர்க் கட்சிகளுக்குச் சாதகமாகப் போய்விடக்கூடாது என்பதே இப்போது ஆளும் தரப்பினரின் கவலை. இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 2

# தொடருந்து ஊழியர்கள் போராட்டம் ஒன்று முடிய மற்றொரு புறக்கணிப்பு

தொடருந்துத் திணைக்கள ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட திடீர் பணிப்புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டபோதும் மற்றொரு சங்கம் நள்ளிரவு முதல் போராட்டத்தை அறிவித்துள்ளது.

பல மாதங்களாகத் தொடருந்து சேவையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படாததால், நேற்றுக் காலை முதல் அத்தொழிலாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனடிப்படையில், காலை 10.40 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து கண்டி நோக்கி பயணிக்க தொடங்கும் டிக்கிரி மெனிகே தொடருந்து உட்பட 10 மணிக்கு பின்னர் இயக்கப்படவிருந்த ஆறு பிரதான தொடருந்து பயணங்களை தொடருந்துத் திணைக்களம் இரத்துச் செய்ய வேண்டியிருந்தது.

காலை மற்றும் மதியம் இயக்கப்பட்ட தொடருந்து காலதாமதமாக இயக்கப்பட்டதால், தொடருந்து பொது மேலாளருடன் நடந்த பேச்சுக்குப் பின், செப்டெம்பர் 25 உதவித்தொகை வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது.

இதனையடுத்து மதியம் 2.30 மணியளவில் தொழிற்சங்கப் போராட்டத்தை முடித்துக்கொள்ளவதாக ஊழியர்கள் முடிவு செய்து அறிவிப்பை விடுத்தனர்.

தொடர்ந்து, மாலை முதல் அனைத்து ரயில்களும் வழமைபோன்று இயங்குமென அறிவிக்கப்பட்ட போதும், லோகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையைத் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அதன் காரணமாக நேற்று நள்ளிரவு முதல் தொடருந்து இயக்கப்படாதென அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த பணிப்புறக்கணிப்பு தொடர்பில் தொடருந்துக் கட்டுப்பாட்டுச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் கூறியுள்ளது.

# சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு தன் பரிசுத்தத்தை அரசு நிரூபிக்கட்டும

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 12**

**சனல்4 ஊடகம் வெளியிட்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான காணொளியில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு மாத்திரமன்றி அந்தத் தொலைக்காட்சி நிற - வனம் ஏற்கனவே வெளியிட்ட கில்லிங் பீல்ட்ஸ் ஆவணப்படம் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும் சர்வதேச விசாரணையை நடத்தி உண்மையை வெளிக்கொணர்வதுடன் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் நேற்று வலியுறுத்தினார்.** 2



## தொடருந்து மோதி யானை உயிரிழப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஞாயிற்றுக்கிழமை இரவு பயணித்த 'புலதுசி' தொடருந்துடன் வெலிகந்தவில் மோதுண்ட யானை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

இதனால் குறித்த புகையிரதப் பாதை ஊடான போக்குவரத்தும் சில 2

## 3 தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

### சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தற்போதுள்ள மருத்துவ பீடங்களின் தரத்திற்கு ஏற்ப இந்தப் புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும். நமது நாட்டு மாணவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் கல்வி கற்கச் செல்கின்றார்கள். நமது நாட்டு மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்நாட்டில் வழங்காமல் 2

## கொக்குத்தொடுவாய் புதைகுழியில் 3 எலும்புக்கூடுகள் நேற்றும் மீட்பு

(ந.லோகதயாளன்)

கொக்குத்தொடுவாய் மணிதப் புதைகுழியில் இருந்து நேற்றும் 3 மனித் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அதனுடன் துப்பாக்கி ரவைகளின் உடைந்த துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியானது 6ஆவது நாளாக நேற்றையதினமும் இடம் பெற்றது அகழ்வு பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே சட்ட வைத்திய அதிகாரி இவ்வாறு தெரிவித்தார், 2

## சனல் - 4 காணொளி தொடர்பில் பிரிட்டனில் விசாரணைகளாம்

சனல்-4 தொலைக்காட்சியின் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான ஆவணப் படம் குறித்து பிரித்தானியாவின் இலத்திரனியல் ஊடக ஒழுங்குப்படுத்தல் பணியகம் விசாரணைகளைத் தொடங்கவுள்ளதாகச் சட்டத்தரணி பசன் வீரசிங்க தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் குறித்த சதித்திட்டத்தை அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மேல் சுமத்தியுள்ள சனல் - 4 ஒளிப்பரப்பிய ஆவணப்படம் குறித்து அவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி பசன் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சதித்திட்டம் குறித்த குற்றச் சாட்டு சம்பந்தமாக இதற்கு முன்னர்தான் சாட்சியங்களுடன் பதிலளித்திருந்த நிலையில், 2

## கொக்குத்தொடுவாய் புதைகுழி பற்றி சர்வதேச விசாரணை நடத்தவேண்டும்

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும்என்றுதமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஐந்தாவது நாளாக நேற்றையதினம் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளை ஆராய்வதற்காக நேரில் சென்றிருந்த அவர் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதப் புதைகுழியில் 17 உடல்கள் காணப்படுவதாகவும், அதற்கும் மேலதிகமாகவும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், மனிதப் புதைகுழுயில் மீட்கப்படுகின்ற ஒவ்வொரு சான்றுப்பொருளும் மிகவும் முக்கியமானது. ஆவை பற்றிய 2

## கொக்குத்தொடுவாய்க்கு தமிழ் எம்பிக்கள் வருகை



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை நேற்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் நேரில் பார்வையிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் செப்ரெம்பர் 6 உத்தியோக பூர்வமாகத் தொடங்கப்பட்டன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி 2

## பெரமுனவின் மீள் எழுச்சியால் சர்வதேச தரப்புகளுக்கும் அச்சம்

### கட்சியின் பொதுச் செயலர் இப்படிக் கதை சொல்கிறார்

பொது ஜன பெரமுன மீண்டெழுவதால் உள்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் மட்டும் அல்ல சர்வதேச தரப்பினரும் அச்சமடைந்துள்ளனர் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுஜனபெரமுனசிதைந்து விட்ட அரசியல் கட்சியாகிவிட்டதெனப் பலர் விமர்சனங்களை தெரிவித்தனர். இந்த நிலையில் தற்போது எமது கட்சி மீண்டெழுவது வெளிப்பட்டுள்ளது. அது உள்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும் சர்வதேச 2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐ.நா.விடம் எழுத்து மூல கோரிக்கை



### முன்வைப்பேன் என்கிறார் மைத்திரி

சஹ்ரானின் தொலைபேசி ஆதாரங்களை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு எடுத்துச் சென்றுள்ள நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் எழுத்து மூலமான கோரிக்கையை கையளிக்கவுள்ளேன் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் 2



## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறிசேனவும் இந்த வாய்ப்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முற்பட்டிருக்கிறார். இதுவரையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுத்து நிறுத்தத் தவறியவர் என்கிற ரீதியில் அவரே அதிகம் விமர்சனங்களுக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்டிருந்தார். இப்போது சனல் - 4 காணொலியை வைத்து அதனைச் சரிப்படுத்திவிட அவரும் முற்படுகின்றார். அதனால் அவரும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றார். அப்படி நிகழ்ந்தால் தன் மீதான கறை நீங்கி விடும் என்று அவர் எதிர்பார்க்கின்றார்.

பொது ஜன பெரமுனவுக்கோ, பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை மாதிரி, அரகலயவின் தாக்கத்தில் இருந்து இப்போதுதான் மீண்டு எழுந்துவர முற்படுகையில் இந்தப் பிரச்சினை பூதாகாரமாக வெளிப்பட்டுள்ளது. எனவே இது ராஜபக்சக்களுக்கு எதிரான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சதி என்று கூறி சிங்கள மக்களின் மத்தியில் தம் மீதான வெறுப்புணர்வைக் குறைப்பதற்கு அந்தக் கட்சியினர் தொடர்ந்து முற்பட்டுவருகின்றனர்.

இவை எல்லாவற்றையும்விட அதிகளவில் இந்தக் காணொளி பற்றிக் கவலைப்படுவது ஐக்கிய தேசியக் கட்சியினர்தான் என்கின்றன கொழும்பு வட்டாரங்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலத்தில், இலகுவாக அந்தப் பொறுப்பை மைத்திரி தலையில் கட்டியடித்துவிட்டுத் தப்பிவிட்ட ரணிலின் 'இமேஜ்' மீது இது பெரும் தாக்கத்தைச் செலுத்துமோ என்று அவர்கள் அஞ்சுகின்றனர். தாக்குதல் நடந்த உடனே, பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்குப் பிரதமரான தன்னை ஜனாதிபதியான மைத்திரி அழைப்பதில்லை என்றும் அதனால் தாக்குதல் குறித்த புலனாய்வு எச்சரிக்கை குறித்துத் தனக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை என்றும் கூறித் தப்பிவிட்டார் ரணில் விக்கிரமசிங்க. அதனால், இந்தத் தாக்குதலுக்கு அவரும் காரணம் என்கிற விமர்சனங்கள் இருந்தாலும் அரசியல் ரீதியில் அது பெரும் தாக்கத்தை அவருக்கு ஏற்படுத்தவில்லை.

தற்போது ஆளும் தரப்பாக இருக்கும் காரணத்தால் - குறிப்பாக ராஜபக்ஷக்களுடன் சேர்ந்திருக்கும் ஆளும் தரப்பாக இருக்கும் காரணத்தால் - சனல் - 4 பிரச்சினையில் ரணில் அதிக பாதிப்பை எதிர்கொள்ளக்கூடும் என்று ஐதேக அஞ்சுகின்றது. அதனாலேயே அவசர அவசரமாக, இந்தப் பிரச்சினை தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றும் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனாலும் அது ஒரு ஏமாற்று, காலங் கடத்தும் முயற்சி, எஞ்சியிருக்கும் ஒரு வருட காலத்திற்குள் முடிக்கப்பட முடியாது என்று தெரிந்து மேற்கொள்ளப்படும் முயற்சி என்று கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இதனால் பாதிப்பு அதிகம் ஏற்படுமோ என்று அஞ்சும் ஐதேக அதிலிருந்து ரணிலை எப்படிக் காப்பாற்றுவது என்றே இப்போது கடுமையாக ஆராய்ந்து வருகின்றது. ஐதேக மட்டுமல்ல, பெரமுனவிலிருந்து இப்போது ரணிலின் விசுவாசியாக, அனுதாபியாக மாறிவிட்ட நிமல் லன்சா போன்றவர்களும்கூட இந்தப் பழி பாவத்திலிருந்து ரணிலை எப்படிக் காப்பாற்றுவது என்பதில்தான் அதிக கவனம் செலுத்தி வருகின்றாராம்.

ஆகமொத்தத்தில் அடுத்துவரும் நாள்களில், இந்த விடயம் தொடர்பில் ராஜபக்ஷக்களின் தலைகள் அதிகம் இலக்கு வைக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

இதற்கிடையில் இந்தப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் இது தொடர்பில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் நிலையில், அங்கு இலங்கை தொடர்பான விடயத்தில் இம்முறை உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புத் தொடர்பான விவகாரமும் எடுக்கப்பட்டுள்ளது. ஜெனிவா சென்று இந்தக் களநிலையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளத் தவறிவிட்டோமோ என்று ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள கிறிஸ்தவ எம்.பிமார் கவலைப்படத் தொடங்கியுள்ளனராம். கூட்டத் தொடர் இன்னும் முடியாத நிலையில் அவசரமாக அங்கு சென்று ஏதாவது செய்ய முடியுமா என்றும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனராம்

சனல் - 4 காணொலியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நியாயம் கிடைக்கிறதோ இல்லையோ அரசியல்வாதிகளில் சிலருக்காவது இலாபம் கிடைக்கும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகின்றது.

- இடிமின்னல் -
(idiminnal23gmail.com)

## சர்வதேச .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:

கடந்த இரண்டு வாரங்களாக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சணல் - 4 வெளியிட்ட 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான சாட்சியங்களை உள்ளடக்கிய ஆவணத் தொகுப்பொன்று பேசுபொருளாக அமைந்திருக்கின்றது.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை போன்றவற்றிற்கு முன்னாள் பாதுகாப்பு செயலாளராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் இருந்த கோட்டாபய ராஜபக்ச முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பில் சிறையில் இருந்த இன்றைய ராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் ஆகியோர் பின்னணியில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்ச, பிள்ளையான் போன்றோர் இதனை மறுதலிக்கின்ற அதேசமயம், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயங்கள் தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணை தேவை என்னும் கோரிக்கையை முன் வைத்துள்ளார்கள். அதேபோல் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் சர்வதேச விசாரணையைக் கோரியிருக்கின்றார். இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இதனை ஒரு பொய்யான ஆவணம் என்று திட்டவட்டமாக நிராகரித்திருக்கின்றது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடப்பதற்கு முன்பாக மட்டக்களப்பு படுவாங்கரையில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்கள் களவாடப்பட்டிருந்தன. ஆனால் இந்தக் கொலை தொடர்பாக அப்பாவிகளான புனர்வாழ்வுபெற்றுத் திரும்பியிருந்த இரண்டு முன்னாள் போராளிகள் கைதுசெய்யப்பட்டிருந்தார்கள். உண்மையில் இந்தக் கொலையுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளான சஹ்ரான் குழுவினர் தப்பிச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

அது மாத்திரமல்லாமல் காத்தான்குடியில் ஒரு குண்டை வெடிக்கச்செய்து பரீட்சிக்கப் பட்ட போதுகூட சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்படாமல் அவர்கள் சுதந்திரமாக சுற்றித்திரிய அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதுகாப்புத்தரப்பிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதன் காரணமாகவே ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்பதும் சணல் - 4 ஆவணங்களினூடாக அறியமுடிகிறது. அதைப்போலவே, லசந்த விக்கிரமதுங்க அவர்களின் கொலைப் பின்னணியிலும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ச அவர்களின் பெயரும் சாட்சிகளால் குறித்துரைக்கப்பட்டுள்ளது. ஆகவே இவை தொடர்பாக எதிர்த் தரப்பிலிருக்கின்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும் பொதுவெளியில் இருக்கின்ற பலதரப்பினரும் ஒரு சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர். சர்வதேச விசாரணையைக் கோருவதின் அடிப்படைப் பொருளானது இலங்கையின் நீதித்துறையின் மீதும் இலங்கையின் பாதுகாப்புத்துறையின் மீதும் அவர்கள் நம்பிக்கையிழந்திருக்கிறார்கள் என்பதாகும்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுற்றபொழுது, இறுதிப் போரில்; ஏறத்தாழ 70,000 பேர் வரை இறந்திருக்கலாம் என்று ஐ.நா. அறிக்கை கூறியது. அது தொடர்பான விசாரணை ஒன்று தேவை என அந்த ஐ.நா. அறிக்கை குறிப்பிட்டிருந்தது. அதன் பிரகாரமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திற்கு இனப்படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா.சபை ஆலோசனை வழங்கியிருந்தது. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் தீர்மானங்களை இலங்கையின் மாறிமாறிவந்த ஆட்சிகள் நிராகரித்தன. ஆண்டகை மல்கம் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி, பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைவருமே சர்வதேச விசாரணையை நிராகரித்தார்கள்.

ஆனால் இன்று கர்தினால் உள்ளிட்ட சிங்கள தரப்பின் ஒரு பகுதியினர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கின்றார்கள். ஏறத்தாழ 260 அப்பாவி மக்களும் 40க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பாகதகுந்தசாட்சியங்களுடன் சணல்-4 ஒரு ஆவணத்தொகுப்பை வெளியிட்டிருக்கிறது. ஆகவே இதில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கும் இந்த சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்று அவர்கள் மறுதலித்தாலும் தாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பதற்கான பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு இருக்கிறது.

அந்த வகையில் எதிர்க்கட்சிகள் கோருவதுபோல் ஒரு சர்வதேச விசாரணையினூடாகவே அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியும்.

இதனைப்போலவே 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரிலும்; பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் நூற்றுக்கணக்கான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அது தொடர்பான ஒரு சர்வதேச விசாரணையை கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் கோரி நிற்கிறார்கள். இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் இலங்கை அரசு சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு தனது புனிதத்தன்மையை நிரூபிக்க வேண்டும்.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக மிகப்பெருமளவிலான பொருளாதார நெருக்கடியில் மூழ்கியிருக்கும் இலங்கை ஆட்சியாளர்கள் வெளிநாட்டு மூலதனங்களைக் கவரவேண்டுமாக இருந்தால், இலங்கையில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்தாக வேண்டும். ஆகவே அவற்றை மனதில் கொண்டாவது அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது.

## தொடருந்து மோதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணி நேரம் தடைப்பட்டது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

## 3 தனியார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருப்பது அவர்களுக்கு நாம் இழைக்கும் அநீதி ஆகும்.

எமது நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் பணியாற்றியவர்களே இங்கும் பணியாற்றுவார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்ச தகுதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய மருத்துவ பீடங்களின் தரத்திற்கு அல்லது அதற்கு அப்பால் இன்னும் அதிக தரத்துடன் இந்த மருத்துவக்கல்லூரிகள் இருக்கவேண்டும் என்று ஒரு சட்டத்தை முன்மொழிந்துள்ளோம். மேலும், அந்தக் கல்லூரிகளுக்கு மூன்று மருத்துவமனைகளும் இணைக்கப்படவுள்ளன.

உயர் கல்விக்காக ஒவ்வொரு துறைகளுக்கும் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அதற்காக அரச வர்த்தமானி மூலம் குறைந்தபட்ச தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டில் சுமார் 13 மருத்துவ பீடங்கள் உள்ளன. அதற்கு சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே உள்வாங்கப்படுகின்றார்கள். உண்மையில் நமது நாட்டு மாணவர்களின் அறிவு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அடிப்படைத்தகுதிகளைக் கொண்ட மாணவர்களுக்கு இன்னொரு வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் மாண வர்களில், 10சதவீத மாணவர்களுக்கு கல்விப் புலமைப் பரிசில்களை வழங்குமாறும் இந்தப் பல்கலைக்கழகங்களிடம் தனிப்பட்ட முறையில் கோரப்பட்டுள்ளன. அடிப்படைத் தகுதிகள் இருந்தும், தொடர்ந்தும் மருத்துவப் படிப்பைத் தொடர முடியாத மாணவர்கள் இந் நாட்டில் உள்ளனர். எனவே அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது உயர் கல்வியைத் தொடர்ந்தால் அதற்கும் எமது நாட்டுப் பணமே செலவிடப்படுகின்றது. அதனால் குறைந்த பட்ச தகுதிகளைப் பெறும் மாணவர்களுக்கு எமது நாட்டிலேயே மருத்துவப் படிப்பைத் தொடரும் வாய்ப்பு இதன் மூலம் ஏற்படுகின்றது.

மருத்துவர்கள் உட்படப் பொதுவாகப் புத்திஜீவிகள் வெளியேற்றம் என்பது சுகாதாரத் துறையில் உள்ள சிலகுறைபாடுகளால் நடப்பது அல்ல. இதற்கு முக்கிய காரணம், 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான சூழ்நிலை. நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க பல்வேறு வழிகளில் வரிகளை விதிக்க வேண்டியிருந்தது. அதன் மூலம் அவர்களின் வருமானம், எரிபொருளுக்கு செலவிட வேண்டிய பணம் மற்றும் அவர்களின் பொது ஊதியம் ஆகியவை குறித்து கேள்விகள் எழும்பின. எனவே இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல தீர்மானிக்கின்றனர்.

நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான வைத்தியர்களே தனியார் சிகிச்சை நிலையங்களில் சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல்வேறு சந்தர்ப்பங்களில் மருத்துவர்களின் பொதுவான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தினார்.

அடுத்த வரவுசெலவுத் திட்டத்திற்குப் பிறகு இதற்கான தீர்வுகளை வழங்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு என்ற வகையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையிலும்கூட அவர்களுக்கு என்ன விடயங்களைச் செய்து கொடுக்க முடியுமோ அவற்றை நாம் நிறைவேற்றி இருக்கின்றோம்.

இந்தப் பிரச்சினைகளுக்கு குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளை வழங்கக்கூடிய திட்டங்களைத் தயாரிக்க எதிர்பார்த்துள்ளோம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் வழங்கப்படும் சம்பளம், நம் நாட்டை விட பத்து மடங்கு அதிகமாக இருக்கலாம். ஆனால் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

நம் நாட்டில் இலவசக் கல்வியில் பல வருடங்கள் கல்வி கற்றவர்களுக்கே இங்கிலாந்து போன்ற நாடுகள் பத்து மடங்கு அதிக ஊதியம் வழங்குகின்றது. ஏனென்றால், அவர்கள் தொடக்கக் கல்வியில் இருந்து உயர்கல்வி வரை இவர்களுக்காக பணம் செலவழிக்கவில்லை என்பதால் இவ்வாறு அதிக ஊதியம் வழங்க முடிகிறது.

என்மீது முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. இதற்கு முன்னர் ஏனைய அமைச்சர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட அனைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் தோற்கடிக்கப்பட்டுள்ளன. எண்கணிதத்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைத் தோற்கடிக்க முடிந்தாலும்கூட, அதன்போது முன்வைக்கப்பட்ட பல்வேறு சிறந்த விடயங்கள் குறித்து எனது அவதானத்தை செலுத்தியுள்ளதுடன், அவை தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவசியமான பணிகளை மேற்கொள்ளவும் நட்டிவடிக்கை எடுத்துள்ளேன்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டதால், பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக எழுத்து மூலமான ஆதாரங்களுடன் கூடிய உண்மைகளை முன்வைக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும் - என்றார்.

## கொக்குத்தொடு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று (நேற்று) மனித எலும்கூடுகள் மூன்று கண்டெடுக்கப்பட்டுள்ளன. நாளையும் பணிகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன. அகழ்வின்போது வேறு சில முக்கியமான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதில் முக்கியமாக துப்பாக்கி சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகள் இரண்டாவது நாளாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமான ஆதாரங்களில் இதுவும் ஒன்று.

குழியில் மனித எச்சங்கள் பல தென்படுகின்றன. அவற்றை முழுவதுமாக மீட்க நீண்ட நாட்கள் தேவை - என்றார்.

இதேநேரம் குறித்த குழியில் இருந்து இதுவரை 18 பேருடையவை எனக் கருதப்படும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

## சனல் - 4 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சனல் 4 தொலைக்காட்சி வேண்டும் என்றே தன்னை இலக்கு வைத்து அவதூறு ஏற்படுத்தும் வகையில் இந்த ஆவணப்படத்தை ஒளிபரப்பியுள்ளதாக சுரேஷ் சாலே, பிரித்தானியாவின் இலத்திரனியல் ஊடக ஒழுங்குபடுத்தல் பணியகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு சம்பந்தமாக இலத்திரனியல் ஊடக ஒழுங்குப்படுத்தல் பணியகம் விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

சனல் - 4 தொலைக்காட்சி ஆவணப்படத்தை வெளியிடுவதற்கு முன்னர் ஒகஸ்ட் 7 சுரேஷ் சாலேவிடம் குற்றச்சாட்டு சம்பந்தமான விடயங்களை கேட்டறிந்தது. அந்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்பதுடன் தாக்குதல் நடந்த காலப்பகுதியில் தான் இலங்கையில் இருக்கவில்லை என்பதையும் சுரேஷ் சாலே மறுநாள் சனல் 4 தொலைக்காட்சிக்குக் கடிதம் மூலம் அறிவித்தார். ஆனால் சனல் - 4 தொலைக்காட்சி அவ்விடயங்களை உள்வாங்கவில்லை. அதனால் முறைப்பாடு செய்யப்பட்டது - என்றார்.

## கொக்குத்தொடுவாய் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆய்வுகளை மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவை அவசியமாகின்றன.

இந்த விடயங்களை ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றபோது, ஊடகங்களை தடுக்கின்ற வகையில் செயற்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், இந்த மனிதப் புதைகுழியின் உண்மையான விடயங்களை கண்டறிவதற்கு சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் - என்றார்.

## கொக்குத்தொடுவாய்க்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்று வரும் பணிகள் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனை நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் போன்றோர் நேரில் பார்வையிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் துரைராசா ரவிகரன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

## பெரமுனவின் மீள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பினருக்கும் அச்சமூட்டுவதாக இருக்கின்றது.

இதன் காரணமாகவே எமது கட்சியை மையப்படுத்தி குற்றச்சாட்டுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. உயிர்த்த தஞாயிறு தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னதாகவே 2018 நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் எமது கட்சி 75 சதவீத மானவாக்குகளைபெற்று மக்களின் ஆணையை அடைந்துவிட்டது.

அதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் மக்கள் ஆணை உறுதியாகக் கிடைக்கும் என்பதும் தெளிவாகிவிட்டது.

அவ்வாறான நிலையில் வெற்றி பெறுவதற்காக வேறுவிதமாக பாதைகளை நோக்கி நகர வேண்டிய அவசியம் எமது கட்சிக்கு இல்லை ஆகவே சர்வதேச விசாரணையோ அல்லது வேறெந்த விசாரணைகளையோ முன்னெடுத்து இந்த விடயத்தின் உண்மையைக் கண்டறியவேண்டும் - என்றார்.

## சர்வதேச விசாரணை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது, தற்போது சனல் - 4 காணொளி சம்பந்தமாக சர்வதேச விசாரணைகள் தேவை என்ற கருத்தை வெளிப்படுத்தி உள்ளது. ஆகவே அடுத்து வரும் மூன்று நான்கு நாட்களுக்குள் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட பிரதியிடம் சென்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான சர்வதேச விசாரணை முன்னெடுக்குமாறு எழுத்து மூலமாக கோரிக்கை ஒன்றை முன்வைக்க உள்ளேன்.

இலங்கையில் கடந்த நான்கு வருடங்களாக இந்த விடயத்துடன் என்னைத் தொடர்புபடுத்தியே, தொடர்ச்சியாகத் திட்டித்தீர்த்து வந்தார்கள்.

உள்நாட்டில் விசாரணைகளை முன்னெடுப்பதால் எவ்விதமான உண்மைகளும் கண்டறியப் படப்போவதில்லை. ஆகவே இந்த விடயம் சம்பந்தமாக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவின், புலனாய்வுப் பிரிவானது, இலங்கைக்கு விசாரணைகளுக்காக வந்தபோது சஹ்ரானின் தொலைபேசிய ஆதாரங்களை (Motherboard) எடுத்துச் சென்றுள்ளது. ஆகவே தாக்குதல் குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதாக இருந்தால் சர்வதேச விசாரணையே ஒரேவழியாகும் - என்றார்.







காலைக்கதிர் Kalaikkathir

# குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நல்லாட்சி அரசு நாட்டின் தேசிய பாதுகாப்பை காட்டிக் கொடுத்தது

## சரத் வீரசேகர சாடல்



குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை காட்டிக் கொடுத்தது. பயங்கரவாதி சஹ்ரானை கைது செய்து முறையாகவிசாரணைசெய்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம். குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாவல பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்களின் திணிப்பு என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிவார்கள். இருப்பினும் தங்களின் அரசியல் நோக்கத்துக்காக இதனைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

சனல் 4 வெளியிட்டுள்ள காணொலியை நாடு என்ற ரீதியில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள்ஒன்றிணைந்து எதிர்த்தால் எவராலும் எதுவும் செய்ய முடியாது. கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக முஸ்லிம் அடிப்படைவாதிகள் தமது உயிரை தியாகம் செய்தார்கள் என்று குறிப்பிடுவதைஏற்றுக்கொள்ள முடியாது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பைக் காட்டிக் கொடுத்தது. அடிப்படைவாத குழுக்களுடன்தொடர்புடையவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னிலைவகித்தார்கள்.

பயங்கரவாதிசஹ்ரானை கைதுசெய்யுமாறுபிடியாணை பிறப்பிக்கபபட்டிருந்த நிலையிலும் அரசியல் நோக்கங்களுக்காக அவர் கைது செய்யவில்லை. குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் 10 அடிப்படைவாத சம்பவங்கள் பதிவாகின. வனாத்தவில்லு பகுதியில் வெடிபொருள்கள் களஞ்சியசாலை கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் குறித்து நல்லாட்சி அரசாங்கம் உரிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குலைத்தடுத்திருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கத்தின்தலைவர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் உட்பட ஒட்டுமொத்த அரசாங்கத்தின் உறுப்பினர்களும்பொறுப்புக் கூற வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களுடன் இணக்கமாகச்செயற்பட்டார். ஆகவே அவரும் குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்குபொறுப்புக்கூற வேண்டும். - என்றார். (05)

# பாடசாலை மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடுகள் ஆகும்

## ராஜீவ பண்டாரநாயக்க பெருமிதம்

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவின்எண்ணக்கருவின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடாகும் என கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்கதெரிவித்தார்.

நிதி தொடர்பான கல்வியறிவை மேம்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான நபர்கள், மாணவர் சந்ததியே எனவும், பாடசாலைகள் ஊடாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க ஜனாதிபதியின் தீர்மானம் காலத்திற்குப் பொறுத்தமானமுடிவு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட '101 கதா' நிகழ்ச்சியில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்கருத்துதெரிவித்த ராஜீவ பண்டாரநாயக்க -

'மூலதனச் சந்தை சங்கங்கள்' மூலம் பங்குச் சந்தை தொடர்பில் முறையான தெளிவை மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கிறோம். இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக உயர்தரப்பெறுபேறுகளின்படி வர்த்தகத் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் 100 மூலதனச்சந்தைச் சங்கங்கள் நிறுவப்படவுள்ளன. இதன் மூலம் மாணவர்களுக்கு மூலதனச் சந்தை பற்றிய விரிவான புரிதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் பரந்த அறிவைப் பெறுவதோடு, நடைமுறை அறிவையும் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

வங்கித் துறை பற்றிய அறிவு பாடசாலைகளில் கொடுக்கப்பட்டாலும், மூலதனச் சந்தை பற்றிய அறிவை அளிக்கும் நிலை குறைவாகவே உள்ளது. நிதி அறிவும் குறைவாக உள்ளது. எனவே, அதையும் தாண்டி வணிக ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அறிவை விரிவுபடுத்துவது, அதாவது கலை, அறிவியல், கணிதம் போன்ற எந்தத் துறை மாணவர்களுக்கும்மூலதனச் சந்தை பற்றிய ஓரளவு அறிவை இந்தச் சங்கங்கள் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் குழந்தைகளிடம் நிதியியல் படிப்பில் புதிய பரிமாணத்தை உருவாக்க எண்ணுகிறோம்.

இங்கு செயலமர்வுகள் மற்றும்கருத்தரங்குகளுக்கு மேலதிகமாக நடைமுறை அறிவை வழங்க முயற்சிக்கிறோம். தற்போதைய தலைமுறை மாணவர்களின் மூலதனச் சந்தை பற்றிய அறிவையும் புரிதலையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அதன்படி, இது அவர்களை சமூகத்துடன்இணைவதற்காக தயார்ப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, அவர்கள் சுயமாகதொழில்முனைவோராக மாறவும், தங்களையும், நாட்டையும் திறம்பட மேம்படுத்துவதில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்தத்திட்டம் பலகூறுகளைக் கொண்டுள்ளது. மாணவர்கள் அறிவு மற்றும் புரிதலுக்கான செயலமர்வுளை நடத்தி போட் டிகள் நடத்துவதன் மூலம்நடைமுறை அறிவை வளர்க்க ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

குறிப்பாக, பாடசாலைகளுக்குஒருலட்சம்ரூபாவீதம் வழங்கி அவற்றை முதலீடு செய்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் அதன் பெறுபேறுகளுக்கு அமைய பாடசாலைகளுக்கு பரிசில்வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலையின் மூலதன சந்தை சங்கத்தின் 10 அங்கத்தவர்களுக்கும் சங்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கும் சிங்கப்பூர் சென்றுபங்குச்சந்தை பற்றிய அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தேவையான முறைமைகளை தயாரித்து வருகிறோம். கல்வி அமைச்சு, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப்பரிவர்த்தனைமற்றும் ஜனாதிபதிஅலுவலகம்ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறிய அளவிலான வர்த்தக முயற்சிகளுக்கு இப்போது பங்குச் சந்தையில் சேரவும், தங்கள் வணிகத்தை மேம்படுத்த மூலதனத்தைப் பெறவும் வாய்ப்பு உள்ளது. இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த நாட்டு பொருளாதாரங்களில் மூலதனச்சந்தை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பங்குச் சந்தையின் சந்தை மூலதனம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாகக் கணக்கிடப்படுகிறது. இது இலங்கையில்சுமார்25வீதம் ஆகவே உள்ளது. இது இந்தியா போன்ற நாட்டில் 80 வீத -85 வீத ஆகவும், மலேசியாவில் 100 வீதம் ஆகவும் உள்ளது. அதன்படி, பங்குச் சந்தையின் பங்களிப்பு ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் மிக உயர்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறதுஎன்பதற்குஇது ஒருசிறந்தஎடுத்துக்காட்டாகும்.

நமது நாட்டின் பங்குச் சந்தையும் இதே நிலைக்கு கொண்டுவரப்படவேண்டும். அதற்கு, நிதி பற்றிய கல்வியறிவு உயர் மட்டத்தில் இருக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க இந்த மூலதன சந்தை சங்கங்களின் ஊடாக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பங்குச் சந்தை டிஜிற்றல் முறையில்நடைபெறுவதால், இன்றைய இளைஞர்கள் அதைக் கையாள்வது எளிதாக உள்ளது. ஏனெனில் இந்த நடவடிக்கைகள் அனைத்தும்விரல் நுனியில் உள்ளன. கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து நடவடிக்கைகளும் உலகில் எங்கிருந்தும் கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக மேற்கொள்ளமுடியும். பாடசாலை மாணவர்களுக்கும் டிஜிற்றல் தொழில்நுட்பத்திற்கும் இடையிலான நெருக்கம் காரணமாக பாடசாலை மட்டத்தில் இதனை பிரபலப்படுத்துவதேசிறந்தது என ஜனாதிபதிதீர்மானித்துள்ளார். உண்மையில்,ஜனாதிபதியின் இந்தத் திட்டம் மிகவும் சரியானது. அதுவெற்றியடையும் என்றஉறுதியானநம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

அரசாங்கத்தால்தொழில் கிடைக்கும் வரை காத்திருக்காமல் பாடசாலை மாணவர்கள் புதிதாக சிந்திக்க வேண்டும். டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத்தால், இன்றையஇளைஞர்களுக்கு உலகளாவிய ரீதியில் கட்டுப்பாடற்ற வாய்ப்புகள் உள்ளன .அதற்கான வழிகாட்டுதலை அவர்களுக்கு வழங்க இருக்கிறோம். மாணவர்கள் மத்தியில் தொழில்முனைவோரை கொண்டு செல்ல வேண்டும். - என்றார்.

(05)

# சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு சிறைகளில் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு

இன்று (செவ்வாய்க் கிழமை) சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதிகளின் உடல், மன மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் பல வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அதேபோன்றுஇந்தவருடமும் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புனர்வாழ்வுப் பிரிவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அதன் பிரகாரம், அன்றைய தினம் சர்வமத நிகழ்வுகள், சுகாதார வேலைத்திட்டங்கள், விளையாட்டு மற்றும் ஆளுமை நிகழ்ச்சிகள், கல்வி மற்றும் போதனை நிகழ்ச்சிகள், குடும்ப சந்திப்புகள், பொழுது போக்கு நிகழ்ச்சிகள், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டங்கள், கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் சிறைச்சாலைகள் நிறுவனத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இன்று அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக்கைதிகளுக்கு விசேடமான உணவு வேளை ஒன்றையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் சிறைக்கைதிகளின் ஆக்கத்திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் சிறைக்கைதிகள் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்சிறைப்படாத எண்ணங்கள் எனும் பெயரில் சித்திரக் கண்காட்சி நேற்று (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. சிறைக்கைதிகள் தின தேசிய விழா இன்று மாலை 2.30 மணிக்கும் நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர்அனுராதஜயரத்ன தலைமையில் கொழும்பு பொது நூலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

சித்திரக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகி இன்று காலை9 மணிமுதல்மாலை 4 மணி வரை கொழும்பு பொது நூலக வளாகத்தில் காட்சிப்படுத்தப்படும்எனவும் அவர் தெரிவித்தார்.

(05)

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயம் சிறுவர் தடகள போட்டியில் அபார சாதனை











கல்முனை கல்வி வலய சாய்ந்தமருதுகோட்டமட்டத்திலான சிறுவர் விளையாட்டு போட்டியில் சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயம் சார்பாககலந்துகொண்டதரம் 3 , தரம் 4 , தரம் 5 ஆண், பெண், கலப்பு அணிகள் மூன்றும் முதலிடம் பெற்று அபாரவெற்றியீட்டியுள்ளனர்.

சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் கல்முனை வலயக் கல்வி அலுவலக சிறுவர் விளையாட்டு இணைப்பாளர் எம்.எம்.ஏ. ஹபீல் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் இந்த சாதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 2019ஆம் ஆண்டு இந்த பாடசாலை மேற்படி போட்டியில் தேசிய மட்டம் வரை சென்று வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

போட்டிக்காக மாணவர்களை பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி பொறுப்பாசிரியர் எம்.எப். எம்.றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ. ஆபாக் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

(05)

# அமைச்சுப் பதவி தருவதாக பல தடவை ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார்!

## மனம் திறந்தார் தயாசிறி ஜயசேகர



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு அமைச்சுப் பதவியை தருவதற்காக பல தடவைகள் அழைப்பு விடுத்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி தலைமையிலானதற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்கத் தான் தயாராக இல்லை என பண்டுவஸ்நுவர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வாரம் தான் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாகச் சிலர் கூறினாலும் அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாரில்லை எனவும்அவர்தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையும் உலக நாடுகளும்

சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இம்முறைக் கூட்டத் தொடரில், இலங்கை ஆட்சியாளர்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பான சாதகமான அணுகுமுறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை காவல்துறை அதிகாரம் தவிர்த்து நடைமுறைப்படுத்தப் போவதாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பதை ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் தனது அறிக்கையில் வரவேற்றிருந்தார். தொடர்ந்து இலங்கை விவகாரத்தில் உரையாற்றிய மேற்கு நாடுகள் பலவும் அதே பாணியில் ரணிலின் இந்த முயற்சியை வரவேற்று உரையாற்றியிருந்தன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினமான மாசி 4க்கு முன்னர் முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆனால், அது நடைபெறவில்லை. அது தொடர்பில் அவர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் சில கடும்போக்கு அரசியல்வாதிகள் எதிர்த்துக் குரல் கொடுத்ததைத் தொடர்ந்தும் பிக்குகளின் எதிர்ப்புக் காரணமாகவும் அவர் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டார்.

அதன் பின்னர் மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, 13ஆவது திருத்தத்தில் உள்ள காவல்துறை அதிகாரத்தைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்தத்தான் முன்முயற்சிகளை எடுக்கப் போவதாக அறிவித்தார். அதற்கான நடைமுறைகள் குறித்தும் தெரிவித்தார். ஆனால், அந்தக் கூட்டம் முடிந்து மாதங்கள் கடந்த பின்னர் இன்று வரையில் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான எந்த நடவடிக்கையும்கூட எடுக்கப்படவில்லை.

இதற்கிடையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் சேர்ந்துகொண்டு, அவரால் முன்வைக்கப்பட்ட யோசனையான மாகாண சபை அதிகாரங்களைப் பலப்படுத்துதல் என்ற திட்டத்தை நடைமுறைப் படுத்தப் போவதாக அறிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. இதன்படி மாகாண சபைகளுக்கு ஆலோசனைச் சபைகள் நிறவப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அந்தச் சபைகள், மத்தியிலிருந்து மீளப்பெறப்பட்ட மாகாண அதிகாரங்களை மீண்டும் மாகாணங்களுக்கே திருப்பியளிப்பது தொடர்பான ஆலோசனைகளை முன்வைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதற்கு வேண்டிய சட்டங்களை ஆக்கும் பொருட்டு சட்ட வரைவுகளைத் தயாரிக்கப் தலைமை அமைச்சர் டினேஸ் குணவர்த்தன தலைமையில் மற்றொரு குழு நியமிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், இவற்றில் எவையும்கூட இதுவரையில் நடக்கவில்லை.

வழக்கம்போலவே இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க காலத்தைக் கடத்தி வருகின்றார் என்பது வெளிப்படையானது. அடுத்த வருடத்தில் எப்படியும் நடத்தப்படவேண்டியிருக்கும் அரசுத் தலைவர் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடத்திற்கும் குறைவான காலமே இருக்கும் நிலையில், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்பது – அதுவும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எதிர்ப்புக்கு மத்தியில் அதனை நடைமுறைப்படுத்துவது என்பது – சாத்தியமற்றதொன்று என்பது இலங்கையின் வரலாற்றைத் தெரிந்த அனைவருக்கும் தெரிந்த சங்கதி. அப்படியிருக்கும்போதும், ரணிலின் ஏமாற்று வித்தைக்குள் சிக்கிக்கொண்டு ஐநா மற்றும் மேற்கு நாடுகள் அவரது முயற்சி என்று சொல்லப்படுவதை வரவேற்றிருப்பது கவலையளிக்கிறது. ஏமாற்றமளிக்கிறது.

அதற்கும் மேலாக 13ஐ நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாக ரணில் அறிவித்திருக்கும் முயற்சிகளை அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான நடவடிக்கை என்றுகூறிப் பல நாடுகள் வரவேற்றிருப்பதும், அது தொடர்பிலான அர்ப்பணிப்பை ஆட்சியாளர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதும் மேலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா. மற்றும் பன்னாட்டு அரசுகளின் அழுத்தம் மூலமே இலங்கையில் தமக்கு நீதியும் நியாயமும் அரசியல் தீர்வும் கிடைக்கும் என்று நம்பியிருந்த தமிழர்களுக்கு இது பேரதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை ஆட்சியாளர்கள் பன்னாட்டுச் சமூகத்தை மிக இலகுவாக ஏமாற்றுகின்றது என்கிற பதிவையும் ஏற்படுத்துகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாமலே இலங்கை அரசு ஏமாற்றி வரும் நிலையில் பன்னாட்டுச் சமூகம் மீண்டும் மீண்டும் அதற்கு ஆதரவாகவே நடந்துகொள்வது தமிழர்களைச் சலிப்படையச் செய்துள்ளது என்பதே உண்மை.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# ஓலைகளின் உன்னதம்

அங்கம் – 13



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

தென்னையும் பனையும் உருவத்தால், பயன்பாட்டால் வேறுபட்டாலும் எங்களின் வாழ்வியலோடு இணைந்தே வந்திருக்கிறது. மென்மையாய் தென்னையும் , வன்மையாய் பனையும் இருந்த போதும் -இரண்டுமே இனிப்பானவற்றை எங்களுக்குக்கெல்லாம்தந்தபடியேதான் இருக்கிறது.என்பதையும் மறந்துவிடல் முடியாது.பனையைப் பற்றிப் பார்க்கும் வேளை - தென்னையும் வருவது தவிர்க்க முடியாதாகவே இருக்கிறது எனலாம். குடியிருக்கும் வீட்டின் கூரையாய் இரண்டின் ஓலைகளும் இருக்கிறது. வீட்டைச் சுற்றி பாதுகாப்பாய் அமைக்கப்படும் வேலியாயும் இரண்டின் ஓலைகளும் இருக்கிறது. மென்மையா? வன்மையா ? என்று வரும்வேளை வன்மையே முன்னிலை வகிக்கும் நிலைக்கு வந்து விடுவதையே காணமுடிகிறது.மென்மையும் அதனை ஏற்று தனக்குரிய நிலையில் அமைதியாகி விடுவதையும் காணமுடிகிறது என்பதும் நோக்கத்தக்கதே.



பனை மரங்கள் கூட்டமாய் குடும்பமாய் வளர்ந்து நிற்கும்.அப்படி வளர்ந்திருக்கும் அந்தப் பனைகளுடாக நடந்து செல்லும்வேளைநல்லதொருஓசைநமது காதுகளில் வந்து விழும்.காற்றினால் பனையின் ஓலை கள் அசையும். இது சாதாரணமாகவே நிகழுவதுதான். ஆனால் உன்னிப்பாய் கவனித்தால் அங்கு ஒரு ஓசை எங்கள் காதுகளுக்குள் வந்து புகுந்து நிற்கும். அந்த ஓசை காற்றின் அசைவால் பனை ஓலைகள் உரசுவதால் வருவதுதான். ஆனால் அப்படியான ஓசையினைக் கேட்கும் பொழுது - பனைமரங்கள் ஒன்றோடு ஒன்று பேசிக் கொள்ளுகின்றனவோ என்றுதான் எண்ணத் தோன்றும். இதனை பனையுடன் ஒன்றிப்போய் அனுபவித்தவர்களால் மட்டுமே உணர்ந்திடக் கூடிய இருக்கும் என்று நினைக்கிறேன்.

பனை ஓலைகளினால் உருவாக்கப் படுகின்ற பாய்கள்பற்றிப் பார்த்தோம். அந்தப் பாய்கள் பலவிதமாய் உதவிடுவதையும் பார்த்தோம். வண்ணங்கள் கொண்ட வகை வகையான பாய்களையும் பார்த் தோம்.இந்தப் பாய்கள் எங்களின் கலைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன என்பதையும் கருத்திருத்த வேண்டும். அந்தக் காலங்களில் நாட்டுக் கூத்துக்களும் , பல வித நாடகங்களுமேதான் எங்களுக்கு உற்சாகம் ஊட்டி - அலுப்பினைக் , களைப்பினைப் போக்கி நின்றன என்பதை மறுத்துவிட முடியாது. கூத்துக்களையும், நாடக ங்களையும் நடத்துவதற்கு மேடை அமைப்பது வழக்கமாகும். அந்த மேடையின்மூன்றுபக்கங்களைமறைப்பதற்குதடுப்புக்கள்பயன்படுத்தப்பட்டன. அந்தத் தடுப்புகளாகப் பயன்படுத்தன என்ன தெரியுமா ? அத்த னையும் பனை ஓலைப் பாய்களே என்பதுதான் இங்கு முக்கியமாகும்.தடுப்பாய் அமைந்ததோடு அமையா மல் - நாடகத்தை, கூத்தை ரசிக்கும் மக்கள் - மேடையின் முன்னே அமர்ந்து இருக்கப் பயன்படுத்தியதும் பனை ஓலையிலானபாய்களாகவே இருந்திருக்கின்றன என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.பனை ஓலைப் பாயில் அமர்ந்து நிகழ்ச் சிகளைக் கண்டு ரசிக்கும்வேளை - பலவகையான சுவையான தின் பண்டங்களைத் தாங்கி நிற்பதும் பனை ஓலைகளால் செய்யப்பட்ட அழகான சின்னப் பெட்டிகளாக இருந்தன என்பதையும்மறந்துவிடவும் கூடாது.



யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில் வீடுகளின் கூரைகள் பனைஓலைகளினாலேயே வேயப்பட்டிருக் கும்.களி மண்ணிலான தரை இருக்கும். அந்தத் தரையினை சாணத்தினால் மெழுகினார்கள்.களி மண்ணைக்கொண்டுஒருஅரைச் சுவரையும் கட்டி னார்கள். வீட்டின் அறைகளாக அமைவதற்கு உரிய பகுதியினை மறைப்பதற்கு தடுப்புகளையும்பயன்படுத்தினார்கள். அந்தத்தடுப்பினை தட்டி என்று அழைத்தார்கள்.அந்தத் தட்டியின் வெளிப்புறம் தென்னை ஓலையின் கிடுகுகளாக இருக்கும்.உடபுறத்துக்கு பனை ஓலைப் பாய்களைப் பயன்படுத்தினார்கள். பனை ஓலைப் பாயினை உட்புறமாகக் கொண்டிருக்கும் தட்டி அழகாகாவே அறைகளின் தடுப்புச் சுவாராக ஆகியே நிற்கும். வீட்டின் உள்ளே கூரையின் மேற்பகுதியில் வெப்பம் உள்ளே வராமல் இருப்பதற்குப் பனை ஓலைப் பாய்களை மிகவும் சீராக வைக்கும் முறையும் அக்காலத்தில் காணப்பட்டது.



தற்போதைய வீடுகளில் மேற் சீற் அடிப்பதுபோல் - அக்காலத்தில் பனை ஓலைப் பாய் சீற்றாகப் பயன்படுத்தப்பட்டிருந்திருக்கிறது. ஆயிரத்து தொழாயிரத்து எழுபதுக்கு முன்னர் கிராமப்புற வீடுகள் இவ்வாறு அமைந்திருந்தன என்பதை மனமிருத்தல் வேண்டும்.

பனை ஓலையினால் செய்யப்படும் பாய்களைவிட - பனை ஓலைகளினால் செய்யப்படும் பல பெட்டிகளும் இருக்கின்றன. அப்படியான பெட்டிகளின் வடிவங்களும், அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களுமே கருத்திருத்த வேண்டியதேயாகும்.கடகம் என்னும் பெயரில் இரண்டுகடகங்கள் இருக்கின்றன. நாக்கடகம்,என்றும்கடகம்என்றும் இவற்றைப் பெயரிட்டழைப்பர். பெயர் என்னவோ கடகம்தான். ஆனால் செய்யப்படும் விதத்திலும், பயன்படும் விதத்திலும் இரண்டுமே வித்தியாசமாய் இருக்கும்.இரட்டை ஓலையினைப் பயன்படுத்தி,அதனின் மேற்பகுதியினை பனை மட்டை நாரினைக் கொண்டு பின்னி, மேல் விழிம்பில் மட்டையினைக் கட்டி அமைவதுதான் நார்க்கடகம் இரட்டை ஓலைகளைக் கொண்டு இழைத்து, மேல்விளிம்பில் மட்டை கட்டப்படுவதுதான் கடகம். இழைக்கும்பொழுதில் பனைமட்டை நார் சேத்து இழைப்பதன் நோக்கம் பாரங்களைச் சுமப்பதற்கு உரிய உரம் வரவேண்டும் என்பதேயாகும். பனை ஓலையுடன் நாரினை இணைத்துக் கடகத்தை உருவாக்க வேண்டும்என்றுசிந்தித்துச்செயலாக்கிய பாங்கில் - நல்லதொரு தொழில் நுட்பம் வெளிப்பட்டு நிற்கிறது என்பதை மனமிருத்தல் வேண்டும். ஏற்கனவே , தென்னை ஓலையைவிட வலிமையாய் இருக்கும் பனை ஓலையானது - மேலும் வலிமை பெறும் வகையில் - பனையின் மட் டையினை இணைத்தமையைப் பாராட்டாமல் இருக்கத்தான் முடியுமா !

பனை ஓலையினால் இழைக்கப் பட்டு, மேல்விழிம்பானது மட்டை கொண்டு கட்டபடாமல் - பனையின் ஈர்க்கினைப் பயன்படுத்தி , விழிம்பு கட்டப்படும் விதத்தில் ஒரு பெட்டி அமைகிறது. அதுதான் சரக்குப்பெட்டி . கறிச் சரக்குகளைப் போட்டு வைப்பதற்குப் பயன்படுத்தப்படுவாதல் இதற்கு இப் பெயர் அமைந்தேவிட்டது.அடுக்குப் பெட்டி என்று இன்னுமொரு பெட்டி பெயர் தாங்கி வருகிறது.என்னதான் வித்தியாசம் என்றால் - சரக்குப் பெட்டி

(6ஆம் பக்கம் பார்க்க...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# குற்றவாளிகளே தாம் செய்த குற்றத்தை விசாரிப்பதன்மூலம் தீர்வுகாண முடியாது

## கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் ராஜபக்ஷக்களே உள்ளனர் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது. உள்ளக விசாரணைகள் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக்கொணர முடி யாது. குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே நாடாளுமன்றத்தில் தெரிவு குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது குற்றவாளி ஒருவர் தனது குற்றத்தை தானே விசாரிப்பது போன்றது என்பதுடன் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில்நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் தற்போதைய அரசாங்கமே உள்ளது என வெளிக்கொணரப்பட்டுள்ளவிடயங்கள்என்பது எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

இது ஓர் ஆச்சரியமானவிடயமும் அல்ல. சனல் 4 காணொலியில் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தாக்குதலின்போது இடம்பெற்ற உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் காரணமாக நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

எவ்வாறாயினும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கும், ஆட்சி அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்வதற்கும், அதனை வெற்றி கொள்வதற்கும் இராணுவத்தைப்பயன்படுத்திஇவர்கள் எந்தவொரு உச்சக்கட்டத்துக்கும் செல்வார்கள்.

தமது மக்களையும் இழப்பதற்கு தயார்என்பதைசரியானகோணத்தில் அறிந்துகொள்ளமுயற்சித்தால் இந்தத்தாக்குதலின்பின்னணி குறித்த உண்மைகள் அனைத்தையும் சிங்கள மக்கள் விளங்கிக்கொள்வார்கள் என நான் நினைக்கிறேன்.

மேலும்நாட்டின்உள்ளக விசாரணைகள் மூலம் உயிர்த்தஞாயிறுதாக்குதலின் பின்னணிமற்றும்தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியாகும்.

நாடாளுமன்றத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே பெரும்பான்மை காணப்படுகிறது.

இந்தபெரும்பான்மை, அரசாங்க தரப்பினரையே இன்று சனல் 4 நிறுவனம் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தியுள்ளது.

தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷ தரப்பினரே உள்ளனர் என்பதை இந்தக் காணொளி மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், குற்றம்சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே நாடாளு மன்றத்தில் தெரிவுக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது வேடிக்கையானது.

அதாவது குற்றவாளி ஒருவர் தன்னுடைய குற்றத்தையே தானே விசாரிப்பது போன்றது. இது போன்ற முட்டாள்தனமான விடயத்துக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. - என்றார். (05)

# நீர்வழங்கல் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

ஐக்கிய நாடுகளின் விசேடசெயற்திட்டத்துக்கான ஸ்தாபனத்தின் தெற்காசியா வின் பணிப்பாளர் சார்லஸ் காலனன் மற்றும் விசேட செயற்திட்ட முகாமையாளர், செயற்திட்ட மேலாளர் ஆகியோருக்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

குறித்தகலந்துரையாடல் தோட்ட உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தி அமைச்சில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நீர்வழங்கல் துறையில் விசேட செயற்திட்டங்களை அமுல்படுத்தவும்,தடையின்றி நீர்வழங்கலை வழங்குதல் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் நீர்வழங்கல் துறையில் புதிய தொழில்நுட்பங்களைஉள்வாங்குதல் தொடர்பாகவும், எல்முதலீட்டு முறைமை மற்றும்சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன் நீர் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது தொடர்பாகவும் விரிவாகவும் ஆரப்பட்டது. இதேவேளை, பெருந்தோட்டபகுதிகளிலுள்ள மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாக விசேட செயற்திட்டங்களை மேற்கொள்ளவும், சர்வதேச நிதி நிறுவனங்களின்உதவிகளை நாடுவதற்கும் முன்மொழிவுகளை உருவாக்குவதற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

இந்தச் சந்திப்பில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வருண சமரதிவாகர, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் நிரந்த ரணதுங்க, பெருந்தோட்ட மனிதவளஅபிவிருத்திநிதியத்தின்தலைவர்பாரத்அருள்சாமி, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர் ஹறித்த விக்கிரமசிங்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் வசந்தா இலங்காசிங்ஹ, பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# ஜனாஸாக்கள் தகனம் குறித்தும் சர்வதேச விசாரணை வேண்டும்

## ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் கோரிக்கை

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொரோனா ஜனாஸாக்கள் தகனம் தொடர்பாக சர்வதேசவிசாரணை அவசர தேவையாக உள்ளது. அந்தத் தேவையை நிறைவேற்றும் அதே வேளையில், 'தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு' மற் றும் 'ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு' மற்றும் 'ஈஸ்டர் தாக்குதல்தொடர்பானஜனாதிபதி ஆணைக்குழு' போன்றவற்றின் அறிக்கைகளில் உள்ள அனைத்து பரிந்துரைகளையும் அரசாங்கம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அமுல்படுத்த வேண்டும் என்பதே இந்த நாட்டின் அமைதியை விரும்பும் மக்களின் நம்பிக்கையாக உள்ளது என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மிருகத்தனமான தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரானுக்கு அரசியல் ரீதியாகபலப்படுத்திஅனுசரணை வழங்கி ஊக்கப்படுத்தியதாக கூறப்படும் அரசியல் தலைவர்களை ஜாதி-மத வேறுபாடின்றி உடனடியாக கைது செய்ய வேண்டும். இவர்கள் போன்றோர்களின் தைரியத்தில் தான் சஹ்ரான் போன்ற தீவிரவாத கொள்கை கொண்ட மனித மிருகங்கள் எம்மத்தியில் அச்சமின்றிநடமாடியுள்ளமை கவலையளிக்கிறது. அத்துடன் நாட்டை சீரழித்த பிரிவினைவாத போரின் போது முஸ் லிம்களைக் கொடூரமாகக் கொன்று குவித்தமுன்னாள்விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசியல் பயணம் மேற்கொண்டு ஈஸ்டர் தாக்குதல் சதி பற்றி அறிந்து அதை மூடி மறைத்து மறைமுகமாக ஆதரித்த அசாத் மௌலானா போன்றோரை உடனடியாக கைது செய்ய இலங்கை அரசாங்கம் சர்வதேச ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டும். மேற் குறிப்பிட்டவாறு அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதன் மூலமே ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகமும், அதனால் ஒடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகமும் சமமாக நீதியைப் பெற முடியும். அது மாத்திரமின்றி கொரோனாத் தொற்று உள்ளதாக அறிவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட சடலங்கள் தொடர்பாகவும் சர்வதேச விசாரணைதேவை. ஏனென்றால், கொரோனாவின் சடலங்களை தகனம் செய்குவதற்கு அரசியல் சதித் திட்டங்கள் இருப்பதாக முஸ்லிம் சமூகம் பலத்த சந்தேகம் கொண்டுள்ளது. பிச்சைக்காரனின் புண் போன்று தகனம் செய்யப்பட்டசடலங்களைவைத்து அரசியல் செய்யும் ஒரு கும்பல் இலங்கை அரசியலில் இருப்பதால், அவர்கள் சந்தர்ப்பவாத அரசியல் செய்வதை தவிர்க்கும் விதமாக எரிக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேசவிசாரணை மூலம்நீதிகிடைக்கஅரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கூறிய விடயங்களுக்கு நீதி கிடைக்காமல் விட்டால் சந்தர்ப்பவாத அரசியல் மற்றும் மதவாத சக்திகள் இளைஞர்களின் மனநிலையை தங்களின் சந்தர்ப்பவாத பேராசைக்காக பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புள்ளதாக சந்தேகிக்கிறோம். எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்இந்தவிடயங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் நடைமுறைச் சாத்தியமானவேலைத்திட்டம்ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (05)

# கல்முனையில் மாணவருக்கு இலவச கற்றல் உபகரணங்கள்

கல்முனை சமுர்த்தி மகாசங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனைப் பிரதேச செயலகப்பிரிவின்கீழ்வரும் கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 345 மாணவர்களுக்கான இலவச பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் ஆரம்பநிகழ்வுகல்முனைப் பிரதேசசெயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை மகாசங்க முகாமையாளர் எம்.என்.எம். நௌசாத் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனைப்பிரதேசசெயலாளர் ஜே.லியாக்கத் அலி பிரதம அதிதியாகவும், சிரேஷ்ட தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் கௌரவ அதிதியாகவும், விசேடஅதிதிகளாக சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான எஸ். சித்தி பரீரா, ஏ.எம். பைசால், யூ.கே.சிறாஜ் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

அதிதிகளாக வலய உதவி முகாமையாளர்கள் மற்றும் பிரிவுகளுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படைஅமைப்பின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (05)

# கற்பகதரு என்னும் அற்புதம்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

செய்வதைப்போலதான் இதுவும் செய்யப்பட்டாலும் - அதனைவிட சற்று பெரியதாக அமைவதுதான் வித்தியாசம். பெரிதாக அமைந்தமையால் இது இப்பெயரினைப் பெற்று நிற்கிறது. சந்தைகளில் தானியங்களை விற்பவர்கள் இந்தகைய அடுக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இடியப்பம், பாலப்பம், பிட்டு, தோசை, இவற்றை செய்து விற்கும் நிலையில் சில வீடுகளும் இருந்தன.அதே வேளை இதற்கென்று - கிராமங்களின் ஒழுங்கைகளிலும் இவற்றை விற்கும் சின்னக்கடைகளும் இருந்திருக்கின்றன. இந்தக்கடைகளில் சென்று இவற்றை வாங்குவதற்கு பயன்படுத்திய ஒரு பெட்டிதான் சுத்துப் பெட்டி . பனை ஓலையால் செய்பட்டு மேல்விளிம்பு இரண்டு அல்லது மூன்று பனை ஈர்க்கினை வைத்து பின்னர் அதனை பனை ஓலையினால் கட்டி அமைக்கப்படுவதே சுத்துப் பெட்டியாக வந்தது.இந்தப் பெட்டி பயனபாட்டை விட்டு இன்னும் போகாதிருக்கிறது. இன் னும் சில வீடுகளில் இப்பெட்டிகளின் பயன்பாட்டினையும் காணக்கூடியதாகவும் இருக்கிறது. இதனை விட இன்னுமொரு பெட்டியும் இருந்தது. அதுதான். மூடற்பெட்டி. இப்பெட்டிஅகலம்குறைந்தது. அதேவேளைதாயும்பிள்ளையும்போலவும் இருக்கும். அதா வது கீழ்ப்பெட்டியினை மூடி வைக்கும் விதத்தில் இது அமைந்திருக்கும். அத்துடன் வண்ணச் சாயங்கள் பூசப்பட்ட ஓலைகளினால் இந்தப் பெட்டிகள் அமைந்திருப்பதும் நோக்கத்தக்கதே.



தட்டுப்பெட்டி என்னும் பெயரிலும் ஒரு பெட்டி இழைக்கப் பட்டிரு க்கிறது.இப் பெட்டி சற்சதுரமாய் பனை ஓலை கொண்டு அமைக் கப்பட்டது.இதன் விளிம்பு பனை ஈர்க்கினால் கட்டப்படிருந்தது.

இந்தப் பெட்டிகளோடு இன்னும் சில பெட்டிகளையும் பனை ஓலையினால் இழைத்துப் பயன்படுத்தியதைக் காணமுடிகிறது.அதன் பெயர்தான் சாமத்தியசோடிப் பெட்டி. இந்தப்பெட்டியானது மங்கலத்திலும் அமங்கலத்திலும் பயன்படுத்தப்பட்டதாக அறிய முடிகிறது.அப்படிப் பயன்படுத்தும் வேளை இப் பெட்டிகளின் அமைப்பில்- வேறுபாடுகள் இருக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டன என்பதும் கருத்திருத்த வேண்டியதே யாகும்.விளிம் பினைத் தடித்த மட்டைகள் தாங்கி இருக்கும்.இந்தச் சாமத்தியச் சோடிப் பெட்டியின் - அதா வது மங் கல நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தும் பெட்டிகளில் - அதன் நடுப்பகுதியும், மூலைப் பகுதியும் வண்ணச் சாயம் பூசிய பனை ஓலைகளால் இழைக்கபட்டிருக்கும் வகையில் வடிவமைக்கப் பட் டிருக்கும்.இப் பெட்டியின் பயன்பாடு அப்பொழுது - மற்றைய பெட்டிகளுக்கு இல்லாத அளவில் - மிகுந்து காணப் பட்டது என்று அறிய முடிகிறது,மாப்பிள்ளை பார்ப்பது, பெண்பார்ப்பது, திருமணம் நிறைவுற்ற பின்னர் சீர்கள் கொண்டு செல்லவும் இப்பெட்டிகள் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன என்பதும் கருத்திருத்த வேண்டியதே.





கொட்டைப் பெட்டி என்று சொன்னவுடனேயே பெரியம்மாவோ, பாட்டியோ கட்டாயம் வந்து நிற்பார்கள்.பணத்தை வைத்திருக்க இப்பெட்டி மிகவும் உதவியிருக்கிறது.இந்தப் பெட்டி கைக்கடக்கமாய் செய்யப்பட்டது. இப்படிச் செய்யப்பட்ட பெட்டி மூடியிருக்கும் வகை யில் இழைக்கப்பட்டது. சாயம் பூசப்பட்ட ஓலைகளும் இப்பெட்டியில் இணை ந்து அழகாய் அதே வேளை கைக்கு அடக்கமாய் செய்யப்பட்டிருக்கும். பணத்தை வைப்பதோடு வெற்றிலையும் அதற்கு அனுசரணையாய் இருக்கும் - பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை , என் பனவும் வைப்பதற்கும் இப்பெட்டி பயன்பட்டு நிற்கிறது. கொட்டைப் பெட்டியை ஆண்களும் அந்த நாளில் பயன்படுத்தியிருக்கிறார்கள். வயதுதானவர்களின் வசமாய் கொட்டைப்பெட்டி இருந்திருக்கிறது என்பது கவனத்துக்குரியதாகும். கொட்டைப் பெட்டியை மடியில் வைத்துக்கொண்டுஅர்ச்சனைப்பெட்டியை வாங்கி ஆலயம் செல்லுவதில் ஒரு ஆனந்தம் இருக்கிறது. அர்ச்சனைக்குரிய தேங்காய், பழம்,பாக்கு, வெற்றிலை. பூமாலை, கற்பூரம், ஊதுபத்தி அனைத்தும் ஒன்றாக இருக்கும் வகையில் ஆலய வாசலில்களில் அமைந் திருக்கும் கடைகளில் அடுக்கி வைக்கப்பட் டிருக்கும் அந்தப் பெட்டி - அதாவது அர்ச்சனைப் பெட்டி பக்தர்கள் அனைவரையும் வா வாவென்றுஅழைத்தவாறுஇருக்கும்நிலை ஒரு - பனை ஓலை தந்த சிறப்பல்லவா !

தமிழ்நாட்டில் கோவில்பட்டி சுற்று வட்டாரத்தில் பனை ஓலைப் பெட்டிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன என அறிகிறோம்.காரணம் இங்கு பனைகள் நிறையவே இருந்திருக்கிறது.இந்தப் பகுதியில் சுவை யாக உண்ணக்கூடிய தின்பண்ட ங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தப்பண்டங்களை வைத்துக் கொடுப்ப தற்கும்,வியாபார ரீதியில் கொடுப்பதற்கும் - பனை ஓலைப் பெட்டிகளையே பயன்படுத்தி இருக்கிறார்கள்.பனை ஓலைப் பெட்டிகளில் வைத்துக் கொடுக்கப்படும் தின்பண்ட ங்களின் சுவையும் கூடுகிறது என் னும் நிலையும் இருப்பதால் - பனை ஓலைப் பெட்டிகளுக்கு நல்ல மதிப்பும் ஏற்பட்டிருக்கிறது.இங்கு நடை பெறும் திருவிழாக்காலங்களில் சுவையான தின்பண்டங்களைத் தாங்கி நிற்கும் நிலை இங்கு செய்யப்ப டும் பனை ஓலைப் பெட்டிகளுக்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தூத்துக்குடிமாவட்டத்தில்இன்றுவரை பனை ஓலைகளைக் கொண்டு செய்யப்படும் பொருட்கள் கைத் தொழிலாய் நடை பெற்றே வருகிறது. ராமநாதபுரம் மாவட்டங்களில் - குறிப்பாக அளகன்குளம், பனைக் குளம் , சித்தார் கோட்டை, பகுதிகளில் பெண்கள் பனை ஓலையினைக் கொண்டு மிகவும் சிறப்பாகத் தொழிலினை முன்னெடுத்து வருகிறார்கள்.கண்களைக் கவரும் விதத்தில் மிகவும் அழகான பொருட்களை யெல்லாம் இவர்கள் செய்து வியக்க வைக்கிறார்கள்.

பெண்கள் தலையில் வைக்கக் கூடிய விதத்தில் - அழகான வடிவில் பூக்களை செய்கிறார்கள்.வெயிற் காலத்துக்குப் பயன்படும் விதத்தில் பனை ஓலையில் அழகான தொப்பிகளையும் ஆக்குகிறார்கள்.பூக்கூடைகளை வண்ணமாய் செய்கிறார்கள். எழுதுகின்ற கருவிகளான பென்சில் , பேனை இவற்றை வைப்ப தற் கான சிறிய பைகளையும் செய்து அசத்துகிறார்கள் எனலாம்.

அழகுப் பையாய் அமைந்திடுவேன்
அர்ச்சனைப் பெட்டியாய் ஆகிடுவேன்
கிழவி கிழவன் மடியிருக்கும்
கொட்டைப் பெட்டியாய் வந்திடுவேன்
அரிசி நெல்லு தானியங்கள்
அனைத்தும் தாங்கும் துணையாவேன்
அம்மா அவிக்கும் பிட்டினையும்
அன்பாய் தாங்கிட வந்திடுவோம்
அப்பம் வாங்க நான்வருவேன்
அரைக்கும் மாவைத் தாங்கிடுவேன்
ஐயா கடையிலும் நானிருப்பேன்
அலியார் கடையிலும் நானிருப்பேன்
அழகாய் ஜொலிக்கும் பூவாவேன்

( வளரும் )

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்த சி.ஐ.டி., ரி.ஐ,டி.முன்னாள் பிரதானிகளுக்கு இடமளிக்குக

## ஹக்கீம் வலியுறுத்து



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தேர்தல் வெற்றி ஒன்றை இலக்குவைத்து, நீண்ட காலமாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவந்ததுஎன்பது வெளிப்பட்டுள்ளசம்பவங்கள் மூலம் ஊகித்துக்கொள்ள முடியுமாகிறது.

அத்துடன் குற்றப்புலனாய்வு துறை மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவுமுன்னாள்பிரதானிகள் வெளியில் வந்து உண்மையை தெரிவித்தால் இது இன்னும் கடுமையான போக்குக்கு செல்ல இடமிருக்கிறது. அதற்கும்நாங்கள் இடமளிக்க வேண்டும் என ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளிப்படுத்தியிருக்கும் தகவல்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்துதெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளிப்படுத்தியிருக்கும் புதிய தகவல்கள் மூலம்தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பது வெளிப்பட்டிருக்கிறது.

இந்தவெளிப்படுத்தல்கள் தொடர்பில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தலையிடாமல், குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகிஇருப்பவர்கள்அதுதொடர்பில் தங்களின் நியாயத்தை தெரிவிப்பதே நல்லது என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். இதனை நாங்கள் வரவேற்கிறோம்.

அத்துடன் சனல் 4 வெளிப்படுத்தி இருக்கும் தகவல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் தயார் எனவும் அதற்கு எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் நீதி அமைச்சர்தெரிவித்திருந்தார்.

அதே நேரம் அரசாங் கத்தின் முக்கியமான நிறுவனங்களுக்கு குற்றச்சாட்டுதெரிவிப்பதற்கு நாங்கள்இடமளிக்கக்கூடாது என்றவகையில் மேலும் ஓர் அமைச்சர் எச்சரிக்கும் வகையில்தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் இந்த சம்பவத்தின் உண்மை நிலை வெளிப்படுவதைத் தடுக்கவேண்டும். அவ்வாறு தடுக்காவிட்டால், அது அரச ரகசியங்கள்வெளிபடுவதற்கு தூண்டுதலாக அமையும். இதன் மூலம் ஒட்டு மொத்த அரச பொறிமுறையும் பலவீனப்படும் என்ற வகையில் தெரிவித்திருந்தார். அரசாங்கத்தின்சிலர் உண்மைவெளிவருவதற்கு விருப்பம் இல்லாமல் இருக்கின்றனர்.

மேலும் நாடுதொடர்பில் எங்களுக்கும் கரிசனை இருக்கிறது. என்றாலும் தேசப்பிரேமிகள் என்ற போர்வையில் மறைந்து அப்பாவி மக்களைக் கொடூரமான முறையில் கொலை செய்ததிரிபோலிகுண்டர்களாக செயற்பட்ட அவர்களுக்கு ஆயுத குழுவொன்றுக்கு தலைமைத்துவம் வழங்கிய அரசாங்கத்தின் தற்போதைய அமைச்சர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதும் தற்போது வெளிப்பட்டிருக்கிறது.

இதன் உண்மையை நாங்கள் தேடவேண்டும். யாரும் இதனை மறைக்க முடியாது. குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ஈடு வழங்குவது மாத்திரமல்லாது, இதன் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களின் உள்ளம் அமைதியடையச்செய்ய வேண்டும்.

அத்துடன் இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகப் பொய் பிரசாரங்களைமேற்கொண்ட குண்டர்கள், அவர்களை பயன்படுத்திக்கொண்டு அரசியல் நோக்கத்துக்காக செயற்பட்டவர்கள்தொடர்பான உண்மைகளை நாங்கள் வெளிப்படுத்தவேண்டும்.

இதன் மூலம் நாட்டின் முக்கிய நிறுவனங்களை பலவீனப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சிப்பதாக அர்த்தம் கற்பிக்க முடியாது. என்றாலும் சர்வதேசத்துக்கு முன்னால் உண்மையை வெளிப்படுத்தும் கடப் பாடு அனைவருக்கும் இருக்கிறது. அதேபோன்று இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள்எனக்குற்றச்சாட்டு தெரிவிக்கும்போது நாங்கள் மிகவும் பொறுப்புடனும் நாட்டின்நற்பெயருக்குபாதிப்பு ஏற்படாதவகையில்செயற்பட வேண்டும்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தேர்தல் வெற்றி ஒன்றை இலக்குவைத்து, நீண்டகாலமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பது வெளிப்பட்டுள்ள சம்பவங்கள் மூலம் ஊகித்துக்கொள்ள முடியுமாகிறது. அத்துடன் குற்றப்புலனாய்வு துறை மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவு முன்னாள் அதிகாரிகள் வெளியிலிருந்து உண்மையை தெரிவித்தால் இது இன்னும் கடுமையான போக்குக்கு செல்ல இடமிருக்கிறது.

அதற்கும் நாங்கள் இடமளிக்கவேண்டும். சட்டத்தை மதித்து செயற்பட்ட பல அதிகாரிகள் உண்மையைத் தெரிவிப்பதற்கு முன்வர இருக்கிறார்கள் என்பதையும் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார்.

(05)

## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் மேம்பாட்டில் லயன்ஸ் கழகம் பங்களிப்பு







சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில்தற்போது இயங்கிவரும்கண் சிகிச்சை பிரிவை சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மேலும் விஸ்தரிப்பது சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான அன்பளிப்புகளைவழங்குதல் மற்றும் மர நடுகை நிகழ்வு என்பன கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழகத்தின் சர்வதேச பணிப்பாளர் மகேஷ் பாஸ்கால், மாவட்ட ஆளுநர் இஸ்மத் ஹமிட், சம்மாந்துறைஆதாரவைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா, சம்மாந்துறை லயன்ஸ் கழக தலைவர் றாபி, பிராந்திய லயன்ஸ் தலைவர் எம்.டி.எம். அனாப், திட்டமிடல்மருத்துவர்நியாஸ் அஹமட், ஆளுநர்செயலாளர் சிறிபால, பொருளாளர்தம்மிக ஏனைய லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

(05)

# கஹவத்தைச் சம்பவத்துக்கு அமைச்சர் ஜீவன் கண்டனம்

## உடனடியாக வீட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை











கஹவத்தைசம்பவத்திற்கு கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான் உடனடியாக அவர்களுக்கு வீட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன்பல்கலைக்கழகத்தில் கல்வி பயில உள்ள மாணவிக்கு முழுமையான புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் குறித்த குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு கஹவத்தை பெருந்தோட்டயாக்கத்தில் அதிகாரியாக நியமனம் வழங்க நடவடிக்கையையும் எடுத்துள்ளார்.

இரத்தினபுரி - கஹவத்தை பெருந்தோட்டயாக்கத்தின் வெள்ளந்துறை தோட்ட முகாமைத்துவத்தால் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் காரணமாக அங்கு தற்காலிகமாக அமைத்திருந்த வீடு தகர்க்கப்பட்டது.

இதனையடுத்து உடன் சம்பவ இடத்திற்கு சென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கஹவத்தை பெருந்தோட்டயாக்கத்திற்குகடும்தொனியில் எச்சரித்தார்.

இந்த நடவடிக்கை தொடர்பாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் கவனத்திற்கும் உடன் கொண்டு சென்றார்.

இந்தமனிதாபிமானமற்ற முறையில் நடந்துக் கொண்ட தோட்ட முகாமைத்துவத்தை வன்மையாககண்டித்ததுடன், உடனடியாக அவர்களுக்கு வீட்டை பெற்றுத்தரவும், பல்கலைக்கழகத்தில் கல்வி பயில உள்ள மாணவிக்கு முழுமையானபுலமைபரிசில் வழங்கவும், அவர்களின் குடும்பத்தில்உள்ளஒருவருக்கு கஹவத்தை பெருந்தோட்டயாக்கத்தில் அதிகாரியாக நியமனம்ஒன்றுவழங்கவும் உத்தரவிட்டார். இதற்கு இணங்கிய பெருந்தோட்ட யாக்கம், அவர்களுக்கு உடன் தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

மேலும், இவ்வாண்டு வரவு - செலவு திட்டத்திற்கு பின் இரத்தினபுரி மாவட்டத்திற்குஅதிகப்படியானவீடுகளை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு ஆலோசனைவழங்கியதோடு, அது மட்டுமல்லாது குறித்த தோட்டத்திற்கு மாதிரி கிராமம் ஒன்றைஉருவாக்குவதற்கும் நடடிவடிக்கை எடுக்குமாறு மேற்படி நிதியத்திற்கு மேலும் ஆலோசனைவழங்கியுள்ளார்.

இதன்போது, அமைச்சருடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் ராஜமணி, இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் ரூபன் பெருமாள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நிரஞ்சன் குமார், அமைப்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள் என பலரும் இந்த சம்பவ இடத்திற்கு விரைந்தனர். மக்களுக்கு எங்கெல்லாம் அநீதி இழைக்கப்படுகிறதோ, அங்கு அவர்களுக்காக துணைநிற்பதாக இதன்போது அமைச்சர்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்படுவதன் அவசியத்தை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சனல் –4 ஆவணம் நிரூபிக்கிறது

## நாடுகடந்த தமிழீழ அரசு இடித்துரைப்பு



இலங்கை குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டுமென்பதை சனல் 4 உறுதிப்படுத்துகிறது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கையில் குறைந்தது 350 பேரைக் கொன்ற 2019 ஈஸ்டர்குண்டுத் தாக்குதலுக்குப் பின்னால் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு புலனாய்வு துறையின் உயர் அதிகாரிகள் உள்ளமையைக்காண்பிக்கும் காணொலியொன்றை ஐக்கிய இராச்சியத்தின் சனல் 4 கடந்த திங்கட்கிழமை வெளியிட்டிருந்தது. பாதுகாப்பு மற்றும் அரசியல் உயர் மட்டங்களின் அங்கத்தவர்கள் சம்பந்தப்பட்டுள்ள நிலையில் எதிர்கட்சித் தலைவர் உள்ளடங்கலாக சிங்கள சமூகத்திடமிருந்து இந்த விடயமானது சர்வதேச விசாரணையொன்றுக்கு பாரப்படுத்தப்பட வேண்டுமெனகோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

இலங்கை அரசு இன ரீதியாக நடுநிலையானதல்ல. ஆகையால் யுத்தத்தின் போதும் 2009 ஆம் ஆண்டு முடிவடைந்தயுத்தத்தின் பின்னரும் ஸ்ரீலங்கா தேசத்தால் புரியப்பட்ட குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துமாறு 2011 ஆம் ஆண்டு முதல் தமிழர்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். சிறீலங்காவின் அரசியல் இராணுவத் தலைவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்துவதற்கான கையெழுத்து இயக்கமொன்றைநாடுகடந்த தமிழீழஅரசாங்கம்ஆரம்பித்த நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான மூன்று மாதங்களில் உலகளாவிய ரீதியில்1.6 மில்லியன் கையெழுத்துக்களை அது பெற்றிருந்தது.

ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் மிலெ் பஷ்லெட் தனது கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி அறிக்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'குற்றவியல் பொறுப் புக்கூறல் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வைவழங்குவதற்கான நடவடிக்கைகளில் முன்னோக்கிச் செல்ல உறுப்பு நாடுகள் பல்வேறு தெரிவுகளைக்கொண்டுள்ளன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை நிலையைப் பாரப்படுத்துவதை நோக்கிச் செல்லும்நடவடிக்கைகளுடன் எடுப்பதுடன் இலங்கையில் அனைத்துத்தரப்புக்களாலும் புரியப்பட்ட சர்வதேசக் குற்றங்களுக்கான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளை தமது நீதிமன்றங்களுக்கு முன்னால் உலகளாவிய நியாயாதிக்கத்தின்கீழ் உறுப்புநாடுகள்மேற்கொள்ள முடியும்.'

பச்லெட்டின் கருத்தை மனித உரிமைகளுக்கான ஐக்கியநாடுகளின் முன்னாள் உயர்ஸ்தானிகர்கள் நால்வராலும் இலங்கைக்கு விஜயம் செய்த மற்றும் அறிக்கைகளை வரைந்த ஒன்பது முன்னாள் சிறப்பு விசாரணையாளர்கள் ஸ்ரீலங்கா மீதான பொதுச்செயலாளர் நாயகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் சகல உறுப்பினர்கள் மூவரும் கடிதமொன்றில் கடந்த 2021ஆம் ஆண்டுபெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வழிமொழிந்திருந்தனர்.

1) மிலேச்சத்தனத்திற்கு காரணமான பொலிஸாரை சுயாதீனமாக முழுமையாக விசாரிக்குமாறுமனிதஉரிமைக் குழு உத்தரவிட்டிருந்தது:

2 அரசின் கைகளில் சித்திரவதை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரொருவருக்குச் சார்பாக ஏகமனதான தீர்ப்பொன்றை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்குழுஇவ்வாண்டு ஏப்ரல் மாதம்12 ஆம் திகதி வழங்கியதாக மனித உரிமைகள் சபைக்கான தனது அறிக்கையில் ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வொல்கர் துர்க் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினரால் வைக்கப்பட்ட குற்றச்சாட்டை இலங்கை அரசு மறுத்திருந்தது. எனினும் அதன்மறுப்பை சகல 17 நீதிபதிகளும் நிராகரித்திருந்தனர். இது தவிர உள்ளூர்த் தீர்வுகளை பிரதிவாதி பெறலாமெனவும் இலங்கை அரசுவாதாடியது. எனினும்உள்ளூர்த்தீர்வுகள் பயன்றதென நீதிபதிகள் குழாம் குறிப்பிட்டிருந்தது .

மிலேச்சத்தனத்துக்கு காரணமான பொலிஸாரை சுயாதீனமாக முழுமையாக விசாரிக்குமாறு இலங்கைக்கு மனிதஉரிமைக்குழு உத்தரவிட்டிருந்தது. மேலும் பாதிக்கப்பட்டவருக்கு போதுமானளவு நட்டஈட்டை இலங்கை கட்டாயம் செலுத்துவதோடு இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் இடம்பெறாதவாறு அதன் சட்டங்களை மாற்ற வேண்டும் எனவும் மனித உரிமைக்குழு தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது. எனினும் மனித உரிமைகள் குழுவின் தீர்ப்பில் கூறப்பட்ட எந்தஒருநடவடிக்கையையும் இலங்கை இன்றுவரை எடுக்கவில்லை.

மனித உரிமைகளுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகர் அல்ஹுஸைன் கடந்த 2015ஆம் ஆண்டு றோம் பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளும்படி கோரியிருந்தார். இலங்கை ரோம் பிரகடனத்தை பின்னோக்கி ஏற்றுக்கொள்வது யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் ஸ்ரீலங்காவால் புரியப்பட்ட இனவழிப்பு மனித குலத்துக்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களை விசாரணை செய்து தண்டனை வழங்கும் நியாயாதிக்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு வழங்குமென நாடுகடந்ததமிழீழ அரசாங்கம் நம்புகின்றது.

சிங்கள சமூகத்திடமிருந்து சர்வதேச விசாரணையைக் கோரும் அழைப்பானது அவ்வாறான நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவது சாத்திமாகுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நம்புகின்றது. இத்தருணத்தை சர்வதேச சமூகம் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டும்.

**3) பாரிய மனிதப் புதை குழிகள்**

கடந்த 30 ஆண்டுகளில் 32 பாரிய மனிதப் புதைகுழிகள் (முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் இறுதியாகக்கண்டுபிடிக்கப்பட்டது 33 ஆவது) இலங்கைத் தீவில் அடையாளங்காணப்பட்டுள்ளன.

காணமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இது தீர்க்கப்படாத துயரக் கதையொன்றாகும். தங்களது உறவுகளை ஒருபோதும் கண்டுபிடிக்காமலே அத்துயரத்துடன் அவர்களது உறவினர்கள் வாழ்ந்து இறக்கின்றனர்.

நீதித்துறை உள்ளிட்ட இலங்கை அரச நிறுவனங்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் இனவாதம் காரணமாக உள்ளூர்ப் பொறிமுறைகள் மூலம் தமிழ் மக்கள் ஒருபோதும் நீதியைப்பெறமாட்டார்கள். அந்தவகையில் அகழ்ந்தெடுத்தலுக்கு சர்வதேசப் பொறிமுறையொன்று ஆதாரப் பாதுகாப்பு இறுதியாகநீதி மற்றும் பொறுப்புக்கூறல் கட்டாயம் ஆகும்.

அகழ்ந்தெடுத்தல் தொடர்பான சர்வதேசப் பொறிமுறைகான அதிகாரத்தை இலங்கை மீதான மனித உரிமைகள் சபையின் 2021ஆம் ஆண்டு தீர்மானத்தின் எட்டாவது பந்தி வழங்குகின்றது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உறுதியாக நம்புகின்றது. இப்பந்தி மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் எதிர்கால பொறுப்புக்கூறல் நடைமுறைகளுக்குத் தேவையான தகவல் மற்றும் சாட்சியங்களை சேகரிக்க - உறுதிப்படுத்த ஆராய- பேண - அதிகாரம்வழங்குகின்றது.

4) எந்தவொரு பௌத்தர்களும் வசிக்காத தமிழ்ப் பகுதிகளில் அரசாங்க ஆதரவுடன் பௌத்த விகாரைகளின் நிர்மாணம் - திட்டமிடப்பட்ட குடிப்பரம்பல் மாற்றம்:

யுத்தம்14ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த பின்னரும்தமிழ்ப்பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் நிலை நிறுத்தப்பட்டுள்ள பாதுகாப்புப் படைகளின் ஆதரவில் வரலாற்று ரீதியிலான தமிழ்ப்பகுதிகளில் பல பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இந்தபௌத்தவிகாரைகள் நிர்மாணிக்கப்படும் தமிழ்ப் பகுதிகளில்பௌத்தர்கள் எவரும் வசிக்கவில்லை.

பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் புத்தபிக்குகள்வழிபாடுகளை நடத்துவதற்காக செல்வர். தொடர்ந்து அனைத்தும் சிங்களவர்களான பௌத்த மக்கள் பாதுகாப்புப் படைகளின் ஆதரவுடன் சென்று தமிழ்ப் பகுதிகளில் குடியேறுவர். இதன்காரணமாக குடிப்பரம்பலில் மாற்றம் ஏற்படுவதுடன் சிங்களக்குடி மக்களாலும், பாதுகாப்பு படைகளாலும் தமிழர்கள் சூழப்பட்டு தமிழ்ப் பகுதிகள் பெரும்பான்மை சிங்களப் பகுதிகளாக மாறும்.

சுதந்திரம்பெற்றகாலத்திலிருந்தே வரலாற்று ரீதியிலான தமிழ்ப்பகுதிகளில் தமிழ்ச் சனத்தொகையைக் குறைப்பதற்கான தொடர்ச்சியான ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் கொள்கையான குடிப்பரம்பல் மாற்ற முயற்சியால் தமிழ் அரசியல் பிரதிநித்துவம் வலுவிழக்கின்றது .

உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் குறிப்பிட்டமை போன்று உதவித் திட்டங்களைப் பேரம்பேசும்போது அமுல்படுத்தும்போது பொறுப்புக்கூறல் உள்ளடங்கலான ஸ்ரீலங்காவின் மனிதஉரிமைகள்நிலையை சர்வதேச நிதி நிறுவனங்கள் கவனத்தில்எடுக்கவேண்டும்.

5) அரசியல் செயற்பாடுகள் காரணமாக நாடாளுமன்றத்தின் தமிழ் உறுப்பினருக்கெதிரான கடும் அச்சுறுத்தல்கள்:

கொழும்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் தனியார் வசிப்பிடத்தைசிலசிங்களபுத்த பிக்குகள் சிங்கள நாடாளுமன்றஉறுப்பினரால்தலைமை தாங்கப்பட்ட பாரிய சிங்களக் கூட்டமொன்று இவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி சூழ்ந்தது.

கஜேந்திரகுமாரின் தந்தையான குமார் பொன்னம்பலம் கடந்த 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அப்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பதவியில் இருந்தார். இன்றுவரை எவரும் நீதிக்குமுன் நிறுத்தப்படவில்லை. இது தமிழர்களால் அமைதியான அரசியற் செயற்பாடுகளுக்கு ஸ்ரீலங்கா தீவில் எவ்வெளியுமில்லை என்பதை வெளிக்காட்டுகிறது.

**6) 13ஆவது திருத்தம்**

உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் 13 ஆவது திருத்தம் தொடர்பான அவரது கருத்து குழப்பத்தை ஏற்படுத்துகிறது. தனது அறிக்கையில் உயர்ஸ்தானிகர் 13 ஆவது திருத்தம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் -

தமிழ் அரசியல் கட்சிகள் புலம்பெயர்க் குழுக்களுடன் கலந்துரையாடல் உண்மையைக் கண்டறிதல் மூலம் மேம்பட்ட நல்லிணக்கத் தெரிவுகள்13ஆம்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது போன்று அதிகாரப் பகிர்வுக்கான ஏனைய அரசியல் தீர்வுகள் தொடர்பான ஜனாதிபதியின் நோக்கத்தை மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வரவேற்கிறது.

சட்டப் புத்தகங்களிலுள்ள சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதே சட்ட ஆட்சியாகும். ஏற்கெனவே உள்ளசட்டத்தை அமுல்படுத்துவதற்கு தமிழ் அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல் ஏன் தேவைப்படுகிறது? இந் நேரத்தில் 13 ஆம் திருத்தத்தின் சாதக பாதகங்களையோ அல்லது 13 ஆவது திருத்தத்தின் மூலம் இந்தியாவின் இராஜதந்திர வகிபாகத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் மட்டுப்படுத்துவது குறித்தோ நாடுகடந்ததமிழீழஅரசாங்கம் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 13 ஆவது திருத்தம் குறித்து கூறப்பட்ட அண்மைய கருத்துகளானவை தமிழர்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றவே ஆகும்எனநாடுகடந்ததமிழீழ அரசாங்கம் நம்புகின்றது. இந்த ஏமாற்றுப்பொறியில் உயர்ஸ்தானிகரும் வீழ்ந்துவிட்டாரோ என நாங்கள் அஞ்சுகின்றோம்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தாமைக்கான உண்மையான காரணமானது சிங்கள அரசியல் சமூகம் ஒருபோதும் இதை அமுல்படுத்த அனுமதிக்காது.

**7) பொதுவாக்கெடுப்பு**

ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் சர்வதேசசட்டங்கள் குறிப்பாக இன்று மரபுவழிச் சட்டமாக கருதப்படுகின்ற நாடுகளுக்கிடையிலான நட்புறவு தொடர்பான ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானம் 2625 (1970) அடிப்படையிலும் சர்வதேச மனித அரசியல் சமூக உரிமைகள்பிரகடனத்தின் அடிப்படையிலும் சர்வதேச நடைமுறை அடிப்படையிலும் தமிழ்த் தேசியப்பிரச்சினைசர்வதேச அனுசரணையுடனான பொதுவாக்கெடுபின்மூலமே தீர்க்கப்படவேண்டுமென உலகத்தமிழர்கள் திடமாகக் கருதுகின்றார்கள்.

2013ஆம்ஆண்டுதமிழக சட்டசபை ஈழத்தமிழரின் அரசியல்எதிர்காலம்இலங்கை ஸ்ரீலங்கா உள்ள தமிழர்கள் மத்தியிலும் புலத்தில் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியிலும் பொதுவாக்கெடுப்பின் மூலமே தீர்மானிக்கப்பட வேண்டுமென

ஏகமானதாகத்தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. - என்றுள்ளது.

(05)

# சிங்கப்பூர் விடுதியில் மனைவியை குத்தி கொலை செய்த இலங்கையர்

சிங்கப்பூரில் இலங்கையர் ஒருவர் தனது மனைவியை குத்திக்கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிங்கப்பூரின் ஈஸ்ட்கோஸ்ட் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தனது மனைவியை கொலை செய்த இலங்கையர்ஒருவர் அதன்பின்னர்நீதிமன்றத்தில் சரணடைந்துதான் கொலை செய்ததை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அவருக்கு எதிராக சிங்கப்பூர் பொலிஸார் குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளனர்.

சிங்கப்பூரின் கட்டொங்கில் உள்ள ஹொலிடே இன்எக்ஸ்பிரசில்தங்கியிருந்த இலங்கையரான ஈசன்தாரககொட்டாகே தனது மனைவியை குத்திக்கொலை செய்துள்ளார்.

அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து நடந்ததை தெரிவித்தவேளையே பொலிஸாருக்கு உண்மை தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் குறிப்பிட்ட ஹோட்டலிற்கு சென்றவேளை அங்கு பாதிக்கப்பட்டவர் அசைவற்ற நிலையில் காணப்பட்டதை கண்டுள்ளனர். அங்கு காணப்பட்ட துணைமருத்துவ பிரிவினர் அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

கணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹோட்டல்அறையிலிருந்துகத்தியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

திங்கட்கிழமைசந்தேகநபர்வீடியோ மூலம் நீதிமன்றத்திற்கு நடந்ததை தெரிவித்துள்ளார். (05)

# குவைத்தில் சிக்கித் தவித்த தாய் 3 குழந்தைகளுடன் இணைந்தார்

குவைத்தில் வேலை இன்றி சிக்கி தவித்த மூன்று பிள்ளைகளின் தாய் நாடு திரும்பிய நிலையில், எவ்வித பாதுகாப்பும் இன்றி இருந்த பிள்ளைகளுடன் இணைந்தார்.

குவைத்திலிருந்துதாய் நாடு திரும்புவதற்கு உதவுமாறு மூன்று குழந்தைகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனை தொடர்ந்து, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 24 மணித்தியாலத்திற்குள் குறித்த தாய் தனது பிள்ளைகளுடன் மீண்டும் இணைவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்ற வசனா பெர்னாண்டோ என்ற தாய்க்கு வேலை வழங்க மறுத்ததால், ஒரு மாதத்திற்கும் மேலாக வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் அறையில் தங்க விடப்பட்டிருந்தார்.

அவர் தனது மூன்று குழந்தைகளைதனதுதாயின் பராமரிப்பில் விட்டுவிட்டு வெளிநாடுசென்றநிலையில், தாய் புற்றுநோயால் இறந்துள்ளார்.

இந்நிலையில், 15 வயது மகன், ஏழு வயது மகள் மற்றும் 5 வயதுமகன் ஆகியோர் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் பாழடைந்த குடிசையில் வசித்து வந்துள்ளனர்.

இவர்களது கோரிக்கை தொடர்பில் உடனடி கவனம் செலுத்திய அமைச்சர் மனுஷ நாணயக்கார, அவர் நாடு திரும்புவதற்கு இலங்கை தூதரகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக ஏற்பாடுகளை செய்திருந்தார். தனது இக்கட்டான நிலையை எடுத்துரைத்த ஊடகங்களுக்கும், அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்ததற்கும் வாசனா தனது நன்றியைத்தெரிவித்தார். (05)

# உடுதும்பர சிறைக்காவலர் கஞ்சாவுடன் கைதாகினார்

உடுதும்பர சிறைக் காவலர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சிறைச் சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பல் லேகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மாத்தளை யடவத்தை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர். சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(05)



# யாழில் கோர விபத்து; ஒருவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணத்தில் அதிசொகுசு பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் கோப்பாயில் மோட்டார் சைக்கிள் திருத்தகம் நடத்துபவரான எமில் ரவி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து அதிசொகுசு பஸ்ஸின் சாரதி, பஸ்ஸை அவ்விடத்தில் விட்டு தப்பித்து சென்ற நிலையில், அவ்விடத்தில் கூடியோர் குழப்பத்தில் ஈடுபட்டு பஸ்ஸின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அந்நிலையில்சம்பவஇடத்துக்குவிரைந்த கோப்பாய் பொலிஸார், விபத்து இடம்பெற்ற இடத்தில்கூடியமக்களைஅவ்விடத்தில்இருந்து அப்புறப்படுத்தி, உயிரிழந்தவரின் சடலத்தை பொலிஸார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# லஞ்ச ஊழல் எதிர்ப்புச் சட்டம் செப். 15 முதல் நடைமுறைக்கு

## நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

தற்போதுள்ள இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஏதாவது பிழையானதீர்மானங்களை வழங்கி இருந்தால் அது தொடர்பாக தேடிப்பார்க்கும் பூரண அதிகாரம் புதிய ஆணைக்குழுவுக்கு இருக்கிறது.

15ஆம்திகதியில்இருந்து புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் செயல்வலுப்பெற்றபின்னர், அரசமைப்புசபையின்அனுமதிக்கமைய இலஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்துதெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது அமுலில்இருக்கும்இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை என மக்கள்மத்தியில்கருத்தாடல் ஒன்று இருந்து வருகிறது.

அதற்கான நியாயமான காரணங்கள் இருக்கின்றன. 1094 இல் ஏற்படுத்தப்பட்ட தற்போதைய இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழு 29வருடங்களாக செயற்பட்டு வந்துள்ளது.

ஆனால் இலஞ்சம், ஊழல் இந்நாட்டில் இருந்து அகற்றப்படவில்லை. அதனால் புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் ஒன்றை அனுமதித்துக்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதிமுதல்செயற்படுத்தப்படும். அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இந்த வாரம் வெளிவரும்.

அத்துடன் இதுவரை இலஞ்ச சட்டம் செயற்படுத்தப்பட்டது அரச துறைக்கும் அரசியல்வாதிகளுக்கும் மாத்திரமாகும்.

என்றாலும் புதிய சட்டத்தின் மூலம் தனியார் துறையின் ஊழல் தொடர்பாக விசாரணை செய்ய முடியும். பாலியல் இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் முடியுமாகிறது.

சட்டவிராதேமான முறையில் சம்பாதித்துக் கொண்ட சொத்துக்களை வெளிநாடுகளில் வைப்பிலிட்டிருந்தால் அவற்றை மீள கையகப்படுத்தும் அதிகாரம் இந்த சட்டத்தின் கீழ் இருக்கிறது.

அதற்காக உலக வங்கியால் ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள்காரியாலயத்துக்கு தேவையானஅதிகாரங்களை வழங்கி இருக்கிறோம்.



மேலும் இலஞ்சம் அல்லது ஊழலை அகற்றுவதற்கு சட்டம்மட்டும்போதுமானதாக இல்லை. பொது மக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இந்நாட்டில் இருந்து ஊழலை இல்லாமலாக்கினால் சில அரசியல் கட்சிகளின் இருப்பு இல்லாமல் போகும். தற்போதுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்திறமை இன்மையால் அனைத்து அரசியல்வாதிகளும் விமர்சிக்கப்பட்டார்கள்.

தற்போதுள்ள இலஞ்ச ஆணைக்குழு எந்த விடயத்தை செய்தாலும் அதற்கு வழங்கி இருக்கும் சுயாதீனத்தன்மை காரணமாக அதன் நடவடிக்கைகளைத் தேடிப்பார்க்க முடியாது.

என்றாலும் புதிய சட்டத்தின் கீழ் இலஞ்ச ஊழல்விசாரணைஆணைக்குழுவின் அதிகாரிகளின் செயற்திறமை தொடர்பாக 4 மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிட வேண்டும்.

அத்துடன் தற்போதுள்ள இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஏதாவது தவறான தீர்மானம் அல்லது தீர்ப்பு வழங்கி இருந்தால் அல்லதுபல்வேறுகாரணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணைகளை வாபஸ் பெற்றுக்கொண்டிருந்தால் அதுதொடர்பகதேடிப்பார்க்கும் பூர்ண அதிகாரம் புதிய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு இருக்கிறது.

இந்த மாதம் 15 ஆம் திகதியில் இருந்து புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் செயல்வலுப்பெற்ற பின்னர், அரசமைப்பு சபையின் அனுமதிக்கமைய இலஞ்ச ஊழல்விசாரணைஆணைக்குழுவுக்கு புதிய ஆணையாளர்கள் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதுடன்அவர்களை இணைத்துக்கொள்வதற்கான தீர்மானத்தை அரசமைப்புச் சபைமேற்கொள்ளவேண்டும். - என்றார். (05)

# தூய பால் வழங்கும் திட்டம் கொழும்பில்

கொழும்பு நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் காலை மற்றும் மாலை வேளைகளில் வீடுகளுக்கு தூய பால் வழங்கும் திட்டத்தை திங்கட்கிழமை முதல் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளது.

நாரஹேன்பிட்டியில்உள்ளதேசியகால்நடைஅபிவிருத்தி சபையின் வளாகத்தில் திங்கட்கிழமை ஆரம்ப நிகழ்வை ஆரம்பித்ததாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

# சனல் 4 நாடாளுமன்ற தெரிவுக்குழு விசாரணையில் நம்பிக்கை இல்லை

## இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் கூறுகிறார்

நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலம் முன்வைக்கப்படும் விடயங்கள் இதுவரையில் எந்த சந்தர்ப்பத்திலும் எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்படவில்லை. இதற்கு பின்னரும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஊடாக இந்த விசாரணை நடுநிலையாக நடத்தப்படும் என எதிர்பார்க்க முடியாது.

அவற்றில் எமக்கு நம்பிக்கைகிடையாது.எனவே சனல் 4 வெளிக்கொணர்வு தொடர்பில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய, முறையானவிசாரணைகளே அவசியம். அதற்கமைவாகவே விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனஐக்கியமக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ்பாக்கீர்மார்க்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றம் ஒன்றே தற்போது நாட்டில் உள்ளது. இந்த நாடாளுமன்றம் தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது.

அதேபோன்று தான் சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாபிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் பிரேரணையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு தீர்வு கிடைத்துவிட்டதா? மருந்துதட்டுப்பாடு பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளதா? மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை தடுக்கப்பட்டுள்ளதா?

தரமற்ற மருந்துகள் மூலம் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நியாயம் கிடைத்துள்ளதா? இல்லை. எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கவில்லை.

நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் ஆதரவு மூலம் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது. அது மாத்திமே இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும்சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து துன்பப்படும் மக்களின்பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 காணொலி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயம் என்ன? இதனூடாக சர்வதேச சமூகம் என்ன எதிர்பார்க்கிறது? இந்தத் தாக்குதலின் பின்னணியில் சந்தேகங்களும், குழப்பங்களும்காணப்படுகின்றன.

இதனை ஆராய வேண்டியுள்ளது. இதில் பாரிய பொறுப்பொன்று இருக்கிறது. தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நீண்ட நாள்கள் கடந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்குநியாயம்கிடைக்கப் பெற வேண்டும். குறிப்பாக இந்தசெய்தியைவெளிப்படுத்தியவர்கள் மீது சாடுவதை நிறுத்தி விட்டு அதில் என்ன விடயம் கூறப்பட்டுள்ளது என கண்டறிந்து உண்மைகளை வெளிக்கொணர வேண்டும்.

நாட்டுமக்கள், சர்வதேசம் நம்பகூடிய நியாயமானதும், சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணையே மேற்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைத்து இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பல விசாரணைகள் மறைக்கப்பட்டுள்ளன. இதுவே உண்மையும்கூட. இவற்றின் மூலம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில்நம்பிக்கை இல்லை. - என்றார். (05)











# அஸிதிஸி ஊடக புலமைப்பரிசில் 2023 இற்கு விண்ணப்பிக்கலாம்

ஊடகவியலாளர்களுக்கான 'அஸிதிஸி வெகுசன ஊடக புலமைபரிசில் - 2023' விண்ணப்பம் கோரல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் 2023.10.11 ஆம் திகதி வரை வெகுசன ஊடக அமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என வெகுசன ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்டஇலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் மூன்று வருடசேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள முழு நேர அல்லது பகுதி நேர அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 18-55 வயதுக்குட்பட்ட ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், பிரதேசஊடகவியலாளர்கள், வெப் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக தொழில்நுட்பகலைஞர்கள்இந்தபுலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் விண்ணப்பிக்கின்ற பாடநெறி ஊடகத்துறையுடன் நேரடியாக தொடர்புப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரி அரச தகவல் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டுக்கான ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும். ஊடகவியலாளர் இந்த புலமைப்பரிசில் திட்ட முறைமை மூலம் இரண்டு முறை பயன்பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், முதற் சந்தர்ப்பத்தில் தகைமை பெறும் 5 வருடங்கள் கடந்த பின்னர் முதற் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவெகுசனஊடகவியலாளர்களுக்கு இரண்டாவது சந்தர்ப்பத்துக்காக விண்ணப்பிக்கலாம்.

இந்தபுலமைப்பரிசித்திட்டமுறைமை மூலம் இளமானி மற்றும் முதுமானிப் பாடநெறிகளுக்காக இரண்டு லட்சம் அல்லது குறுங்கால அல்லது நீண்டகால சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா, உயர் டிப்ளோமா பாடநெறிகளுக்காக ஒரு லட்சம் ரூபா அதிகபட்சமாக இந்தப் புலமைப்பரிசில் நிதி வழங்கப்படும். புலமைப் பரிசிலுக்காக தகைமை பெறுகின்ற ஊடகவியலாளர்களுக்கு பாடநெறிகளுக்கான கட்டணத்தில் 50 சதவீதத்தை பாடநெறியின் ஆரம்பத்தில் முதற் தவணையாகவும், மிகுதி 50 சதவீதத்தில்25சதவீதத்தைபாடநெறியின் இரண்டாவது தவணையிலும் மிகுமி 25 சதவீதத்தை பாடநெறியை பூர்த்தி சென்று சான்றிதழை சமர்ப்பித்தவுடன் வழங்கப்படும். இந்த புலமைப்பரிசிலுக்கானவிண்ணப்பங்கள் 2023.10.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பணிப்பாளர் (ஊடகம்), வெகுசன ஊடக அமைச்சு,இலக்கம் 163 'அஸிதிஸி' மெந்துர,கிருலப்பனை மாவத்தை,பொல்ஹேன்கொடை,கொழும்பு -05' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

'அஸிதிஸி வெகுசன ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் -2023' தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 011-2513645,011-2514632 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மாதிரி விண்ணப்ப படிவத்தை வெகுசன ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (05)

# விசேட பயிற்சிபெற்ற புதிய சுகாதார ஊழியர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

அண்மையில் கிழக்கு மாகாணசபையல்பலநோக்கு அபிவிருத்தி செயலணி ஊழியர்கள் 886 பேருக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட அலுவலகங்களுக்குநியமிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள் 161 பேருக்கான நான்கு நாள் விசேட பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும்வைபவமும், கலை நிகழ்ச்சியும் சனிக்கிழமை கல்முனைபிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு தலைமையுரை நிகழ்த்திய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தனதுரையில் நோயாளர்களை எப்படி கையாள வேண்டும் என்பது முதல் சுகாதாரத்துறையின்பல்வேறு விடயங்களையும், நேர முகாமைத்துவத்தையும், சுகாதார பணியின் மாண்பையும் கற்றுக்கொண்ட நீங்கள்தொடர்ந்தும்உங்கள் பணியை சிறப்பாக செய்ய வேண்டும். நாட்டினுடைய பொருளாதார சிக்கல் நிறைந்த இந்தகாலகட்டத்தில் இலங்கையில்எங்குமில்லாது இப்படியானஒருபணியைகல்முனைபிராந்தியகாரியாலயம் செய்திருப்பதுஎல்லோருக்கும் ஓர்எடுத்துக்காட்டாகஅமைந்துள்ளது. - என்றார்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த அவர், அரசியலுக்காக இனவாதம், மதவாதம் பேசுபவர்களை தோற்கடித்து இங்குபல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த 101 தமிழ் மொழி பேசுபவர்களும், 60 சிங்கள மொழி பேசுவர்களும் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.அரசபணம் பல்வேறு தேவைகளுக்காக வீணடிக்கப்படும் இன்றைய நிலையில் அரசுக்கும், நாட்டுக்கும்நன்மைபயக்கும் வகையில்உங்கள்பணியை முன்னெடுக்க தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில்கல்முனை பிராந்தியசுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம்.வாஜித், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம். மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர், பிரிவுத்தலைவர்கள் உட்பட பிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)


JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
இன்னும் 03 நாள்கள்
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2023இல் வெளியிடப்பெற்றது.